வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 22.01.2022 சனிக்கிழமை இதழ் : 48 பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# அமெரிக்கா, மேற்கு நாடுகளுக்கும் தமிழ் கட்சிகளின் பொது ஆவணம்!

## அடுத்த வாரம் கையளிக்க தீர்மானம்



யாழ்ப்பாணம், ஜனவரி 22

"வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்த ஆவணம் அமெரிக்கா, மேற்கு நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளின் தூதரகங்களிடமும் கையளிக்கப்படவுள்ளது", என்று பொது ஆவணத்தைத் தயாரிக்க ஏற்பாடு செய்த கட்சியும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியுமான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்தார். 15

## மாகாண சபைத் தேர்தலை இவ்வருடம் நடத்தவேண்டும்

### அமைச்சர் நிமல் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 22

இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

விரைவில் தேர்தலை நடத்தி ஜனநாயக 15

## சர்வதேச வர்த்தக சந்தை யாழில் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன. 22

12ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த சந்தை இன்று சனி மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை 15

## சுன்னாகத்தில் வழிப்பறி; 3 சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 22

சுன்னாகம் மற்றும் இளவாலையில் பட்டப் பகலில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 15

## கமநல திணைக்களத்துக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்!



கொழும்பு, ஜன. 22

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு திடீர் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டார்.

நாட்டின் ஜனாதிபதி ஒருவர் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு கண்காணிப்பு பயணம் 15

## 7 ஆயிரம் ஹெக்ரெயர் நிலத்தை முல்லைத்தீவில் சுவீகரிக்க முயற்சி!

### பாராளுமன்றில் சார்ள்ஸ் எம். பி. சாடல்

கொழும்பு, ஜன. 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் விவசாய மற்றும் பூர்வீக நிலங்களாகவுள்ள 7091.64 ஹெக்ரெயர் நிலத்தை சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை விடுப்பதற்கு வனவளத் திணைக்களம் முயற்சிக்கிறது என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றம்சாட்டினார். அத்துடன், இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு வன சீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு 15

## ஐந்து ரூபாய் விலை உயர்வு போதாது

### பால் உற்பத்தியாளர்கள் சங்கம்

கொழும்பு, ஜன. 22

ஒரு லீற்றர் பசுப்பாலுக்காக ஐந்து ரூபாய் விலை அதிகரிப்பு போதுமானது அல்லவென பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது, ஒரு லீற்றர் பசும்பால் 85 முதல் 90 ரூபாய்வுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது.

இந்தநிலையில், ஒரு லீற்றர் பசுப்பாலுக்காக குறைந்தது 150 ரூபாவாயேனும் வழங்கப்படவேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் சங்கம் கோரியுள்ளது. (அ)

## தொற்றுக்கு 17 பேர் மரணம்

கொழும்பு, ஜன. 22

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் 17 பேர் உயிரிழந்தனர் என்று நேற்று வெள்ளிக்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதி செய்தார்.

இதில், 13 ஆண்களும் 4 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களுள் 10 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

இந்த மரணங் 15



## இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து காரைநகரில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 22

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும், அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரியும் காரைநகர் பிரதேச கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கமும், யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் 15



## நெருக்கடி நிலையிலிருந்து மீள ஒன்றிணைந்து செயல்படுவோம்!

### கூட்டமைப்புக்கு நாமல் அழைப்பு

கொழும்பு, ஜன. 16

தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்காக அரசியல் செயல்பாடுகளை தேர்தல் காலத்திற்கு ஒத்திவைத்துவிட்டு இப்போது ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் எதிர்க்கட்சியினரை கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 15

## தாயும் மகளும் தீயில் கருகி பலி!

### கிளிநொச்சியில் பரிதாபம்

தருமபுரம், ஜன. 22

கிளிநொச்சியில் தீயில் கருகிய நிலையில் தாய், மகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தருமபுரம் பொலிஸ் பிரிவில் புன்னை நீராவி, நாதன் குடியிருப்பு பகுதியிலேயே நேற்று மாலை இந்த இரண்டு சடலங்களும் 15

## இப்படியும் நடக்கிறது...!

தனது மனைவி இறந்துபோய்விட்டதால் அவர் மறு மணம் செய்துகொள்வது என்று தீர்மானித்தார். அப்பொழுது அவருக்கு வயது அறுபதை நெருங்கிக் கொண்டிருந்தது.

முதுமைக் காலத்தில் அவருக்குத் திருமண ஆசை ஏற்பட்டது, அவருடைய நண்பர்களுக்குப் பிடிக்க வில்லை.

ஒரு நாள் நண்பர்கள் அவருடன் உரையாடிக்கொண் டிருந்தபோது தங்கள் அதிருப்தியை வெளியிட்டனர்.

“இந்த வயதிலும் உங்களுக்குத் திருமணம் அவசியம் தானா? உங்களுக்கு ஏன் இப்படிப்பட்ட எண்ணம் ஏற் பட்டது?” என நண்பர்கள் கேட்டனர்.

அதற்கு அவர்,

“நண்பர்களே, உங்கள் அன்பான கருத்துக்கு நான் பதில் சொல்லி ஆகவேண்டும். இளமைப் பருவமோ - முதுமைப் பருவமோ, ஆணுக்கு ஒரு பெண் துணை தேவை. நான் முதுமைக் காலத்தில் திருமணம் செய்து கொள்வதற்கு இது ஒரு காரணம். எனக்கு வாய்க்கும் மனைவி நல்லவளாக, என்னிடம் அன்பும் ஆதரவும் உள்ளவளாக இருந்தால் முதுமைக் காலத்திலும் நான் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு வழி பிறக்கும் அல்லவா?” என்றார்.

அவரின் இந்தப் பதிலைப் கேட்ட நண்பர்கள், “நீங்கள் எதிர்பார்த்தற்கு மாறாக முதுமைக் காலத்தில் உங்களுக்கு வந்து வாய்க்கும் மனைவி பொல்லாத வளாக இருந்து விட்டால்?” - என்று கேட்டனர்.

“வயதுதான் ஆகிவிட்டதே? இன்னும் கொஞ்ச காலம்தானே அவளுடன் வாழப்போகிறோம் என்று மனத்தைத் தேற்றிக்கொள்வேன்” என்று அவர் பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையை ஆற்றி முடிந்ததும், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மிகுந்த கோபமடைந்தவராக, பஸில் ராஜபக்ஷவிடம் திட்டித்தீர்த்தார் என்ற செய்தி வாசகர்கள் அறிந்ததுதான்.

ஜனாதிபதி கோட்டாபயவிடமிருந்து இவர் எதை எதிர்பார்த்தாரோ என்றும் உங்களில் பலர் உங்களுக் குள்ளேயே கேட்டிருக்கவும் கூடும்.

உண்மைதான், அவர் தனது உரையில் நிச்சயம் சில அறிவிப்புக்களை விடுப்பார் என்று வேறு சில ஊடகக்காரர்களும் நம்பித்தான் இருந்தனர். அந்த நம்பிக்கையைத்தான் சம்பந்தனும் உண்மை என்று நம்பிக்கொண்டு, அவரது உரையில் எதிர்பார்த்திருந் தார், அது இல்லை என்றதும்தான் அவர் கோபமடைந் தார் என்றும் சிலர் கூறுகின்றனர்.

இந்த ஊடகங்களின் கதையைக் கேட்டு நம்பிக்கை கொள்ளும் அளவிற்கா சம்பந்தன் இருக்கிறார்?

இந்த சந்தேகம் ஊர்க்குருவிக்கும் ஏற்பட்டதால், அதுபற்றி அறிவதற்காக - மேலும் ஏதேனும் தகவல் களை ‘பிடுங்கலாம்’ என்பதற்காக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர் ஒருவருடன் பேசினேன்.

அப்போது அவர் சொன்ன தகவல் ஆச்சரியமாக இருந்தது.

“இல்லை... சாம் அண்ணர், கோட்டாபய நிச்சயம் தீர்வு ஒன்றை முன்வைத்தே ஆகவேண்டும், இல்லை யேல் சர்வதேசம் சும்மா விடாது என்று திரும்பத் திரும்ப பல தடவை என்னிடம் சொல்லியிருக்கிறார். அவர் கோட்டாபய தப்பமுடியாது என்று ஒரு தடவையல்ல பல தடவைகள் சொல்லியிருக்கிறார்” என்றார்.

அப்பொழுது தான், சம்பந்தனுக்கு ஏற்பட்ட கோபம் நியாயமானதுதான் என்பது புரிந்தது.

அவர் நம்பிக்கொண்டிருந்திருந்தால், அது நடக்காத போது கோபம் வருவது இயல்பானதே.

ஆனால், எந்த நம்பிக்கையில் சம்பந்தன் கோட்டா செய்தே ஆகவேண்டும், இல்லையேல் சர்வதேசம் விடாது என்று நம்பிக்கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை.

ஆனால், இந்த வேளையில் அவருக்கு ஒரேயோர் ஆறுதலையே சொல்லலாம்.

‘இன்னும் இரண்டரை வருடங்களில் தேர்தல் வரும்தானே ஐயா, அதுவரை பொறுத்திருப்போம்’!

**- ஊர்க்குருவி**

# இந்த நாட்டை ஆட்சிசெய்ய ஹிட்லர்தான் இன்று தேவை

## இப்படி சொல்கிறார் அமைச்சர் சந்திரசேன

**கொழும்பு, ஜன. 22,**

**தொழிற்சங்கங்கள் நாட்டை குழப்பிவரும் நிலை யில், மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் நிலையில் ஹிட்லர் போன்றவர்களின் ஆட்சியே சரியானது எனவே இந்த நாட்டை ஆட்சிசெய்ய ஹிட்லர்தான் தேவைப்படு கின்றார் என காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான மூன்றாம் நாள் சபை ஒத்தி வைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய போதே இவ் வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இன்று உலகின் வல்லரசான சீனாவை எடுத்துக்கொண்டால் அவர்கள் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலமே உலகின் முதலாவது பொருளா தார வல்லரசாக மாறியுள்ளனர். இதனையே எமது அரசு முன்னு தாரணமாக எடுத்துக்கொண்டு கிராமத்தை அபிவிருத்தி செய்து அதன் மூலமாக நாட்டை கட்டி யெழுப்பும் வேலைத்திட் டத்தை ஆரம்பித்துள்ளோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் ஆட்சியில் நாடு பூராகவும் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன் னெடுத்து வருகின்றோம்.

இதேவேளை நாட்டில் பொருளாதார வாழ்வாதார பிரச் னைகள் ஏற்பட்டுள்ளமை உண் மையே, விலைவாசிகள் அதி கரித்துள்ளன , அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கொரோனா சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இந்த பிரச் னைகள், நெருக்கடிகளை நாம் மறுக்கவில்லை. அரசாக இதற்கு தீர்வு பெற்றுக்கொடுக்கவும் வேண்டும். இபோதும் அது குறித்த மாற்று வேலைத்திட் டங்களை நாம் ஆரம்பித் துள்ளோம். எதிர்வரும் பெப்ர வரி மாதம் 3 ஆம் திகதிக்கு பின் னர் இது குறித்து துரிதமான வேலைத்திட்டங்கள் முன்னெ டுக்கப்படும்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜ பக்ஷவிற்கு எதிராக விமர்சனங் கள் முன்வைக்கப்பட்டாலும், சமூக வலைத் தளங்களில் விமர் சித்தாலும் ஜனாதிபதி திறமை யான தலைவர் என்பது எமக்கு தெரியும். அவர் எப்போதும் ஜன நாயகத்தை பாதுகாக்கின்றார். ஜனாதிபதி சர்வாதிகாரி ஹிட்லர் போன்று செயற்படுவார் எனக் கூறினாலும் அவர் ஹிட்லர் அல்ல, ஆனால் நாட்டின் இன் றைய நிலைக்கு நாட்டை ஆட்சி செய்ய ஹிட்லர் ஒருவர்தான் வேண்டும். தொழில்சங்கங்கள் நாட்டை குழப்பிவரும் நிலை யில், மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் நிலையில் ஹிட்லர் போன்றவர்களின் ஆட்சியே இந்த நாட்டுக்கு சரியானது - என்றார்.

## சமுளையடி வட்டை வீதி புனரமைப்பு ஆரம்பம்

*மட்டக்களப்பு, ஜன. 22*

மட்டக்களப்பு மாவட்டத் தில் சீரற்ற காலநிலை காரண மாக மக்கள் போக்குவரத்து செய்யமுடியாத நிலையிலிருந்த போரதீவுப்பற்று பிரதேச சபைக்குட் பட்ட கம்பி ஆற்று சமுளையடி வட்டை வீதி திருத்தும் பணிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் ஏற்பட் டுள்ள பருவப்பெயர்ச்சி மழை காரணமாக இந்த வீதியானது வெள்ளத்தால் முற்றாக அடித் துச் செல்லப்பட்டு சேதமாக் கப்பட்டுள்ளது.

இதனால் இந்த வீதியால் பயணம் செய்யும் பாட சாலை ஆசிரியர்கள் மாணவர்கள், விவசாயிகள், வயோ திபர்கள் நோயாளிகள் மிகவும் சிரமப் படுகின்றனர்.

சமுளையடி வட்டை ஆனைகட்டிய வழி பிரதான வீதியானது போரதீவுப்பற்று பிரதேச பிரிவுக்குட்பட்ட மண் டூர் கமநல கேந்திர நிலையத் துக்கு உரிய விவசாய வீதியாகும். பல வருடங்களாக வெள்ள இடரால் தொடர்ச்சியாக சேதமடைந்து வருகின்றது.

இந்த வீதியை போரதீவுப் பற்று மண்டூர் கமநல சேவை பெரும்பாக உத்தியோகஸ்தர் கோ.ஜெயகாந்தன் தலைமை யில் புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

# இளம்தாய் படுகொலை; கணவன் கைதானார்!

*நுவரெலியா, ஜன. 22*

மஸ்கெலியா - கங்கேவத்தை யில் ஒரு பிள்ளையின் தாயான 24 வயதான இளம் தாயொ ருவர் படுகொலை செய்யப் பட்டார் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் குறித்த தாய் உயிரி ழந்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, இளம் தாயின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது முன்னெடுக் கப்பட்ட ஆரம்பகட்ட விசார ணைகளில், குறித்த இளம் தாய் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ள நிலையில், குடும்பத் தகராறு காரணமாக இளம் தாய் கொலை செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதையடுத்து நீதிவான் விசாரணைகளின் பின்னர், சடலம் டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சம்ப வம் தொடர்பில், உயிரிழந்த யுவதியின் 23 வயது கணவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை ஹற்றன் நீதிவான் நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பிரித்தானிய அமைச்சருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு!

*கொழும்பு, ஜன. 22*

தெற்கு, மத்திய ஆசியா, ஐ. நா. மற்றும் பொதுநலவாயத் துக்கான பிரித்தானிய அமைச் சர் தாரீக் அஹமட் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தனை நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளின் முன்னேற் றங்கள் சமகால விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள் ளது. குறித்த சந்திப்பில் கூட்ட மைப்பின் ஊடகப் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய தூதரும் கலந்துகொண்டனர்.

## 70 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் இருவர் கைது!

*கொழும்பு, ஜன. 22*

பாணந்துறை பிரதேசத்தில் அலுபோமுல்ல என்ற இடத்தில் 70 மில்லியன் ரூபா பெறுமதி யான ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதன்போது இருவரிடமிருந்தும் 7 கிலோகிராமுக்கும் அதிக நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட் டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 25 மற்றும் 30 வயதுகளையுடைய இருவரும் சகோதரர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu
22.01.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## தாரிக் அகமட்டின் கூற்று உணர்த்துவது?

பிரித்தானியாவின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய அமைப்புக்களுக்கான அமைச்சர் தாரிக் அகமட், இலங்கைக்கு விஜயம் செய்து, பல தரப்பினரையும் சந்தித்திருக்கின்றார். கூட்டமைப்பையும் சந்தித்திருக்கின்றார். ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள்தான் நமக்கு முக்கியமானது – அதாவது, மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மிகவும் முன்னேற்றகரமாக உள்ளதாக தாரிக் குறிப்பிட்டிருக்கின்றார். அதே வேளை, பிரித்தானிய புலம்பெயர் அமைப்புக்களுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருமாறும், ஜனாதிபதி – அவரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

பிரித்தானியாவில் இயங்குவதாக கூறப்படும் சிலர் ஒன்றுகூடி, 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிராக கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இந்தியாவிற்கான கோரிக்கையில் கையெழுத்திட்ட பிரதான தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்களையும் விமர்சித்திருந்தனர். இவர்கள் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போதுதான், மறுபுறம், இவர்கள் வாழும் நாட்டின் அமைச்சர், அரசாங்கத்தின் மனித உரிமைச் செயல்பாடுகளை பாராட்டிச் சென்றிருக்கின்றார். கடந்த ஆண்டு மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட புதிய தீர்மானத்திற்கு பிரித்தானியாவே தலைமை தாங்கியிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில், தெற்காசிய விவகாரங்களுக்கான பிரித்தானிய அமைச்சர் அரசாங்கத்தை பாராட்டுகின்றார்.

இதுதான் நிலைமை என்றால், அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தத்தையும் இழந்துவிடக் கூடாதென்று, தமிழ் தேசிய கட்சிகள் குரல் கொடுப்பதில் என்ன தவறிருக்கின்றது? இதனை தவறென்று கூறும் தகுதிநிலை புலம்பெயர் குழுக்களுக்கு இருக்கின்றதா? ஏனெனில், இதே பிரித்தானியாவில்தான் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக தாம் ‘லொபி’ நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக, பல பிரித்தானிய தமிழ் அமைப்புக்களும் கூறிவருகின்றன! இதே தாரிக் அகமட்டை சந்தித்துதான், இலங்கை அரசாங்கத்தின் உரிமை மீறல்கள் தொடர்பில் விளக்கமளித்ததாக சுமந்திரனும் கூறிவருகின்றார்.

சுமந்திரன், அமெரிக்க பயணத்தை தொடர்ந்து, இங்கிலாந்தில் குறித்த அமைச்சரையும் சந்தித்திருந்தார். ஆனால், அந்த அமைச்சரோ – அரசாங்கத்தின் மனித உரிமை செயற்பாடுகளில் முன்னேற்றம் இருப்பதாக கூறுகின்றார். அவ்வாறாயின் குறித்த அமைச்சருக்கு சரியான விடயங்களை புலம்பெயர் அமைப்புக்கள் வழங்கவில்லையா? சுமந்திரனும் சரியான விடயங்களை வழங்கவில்லையா? கூட்டமைப்பினர் திருடர்கள், நாங்கள்தான் சர்வதேசத்தை கையாளக் கூடிய ஏகப்பிரதிநிதிகள் என்று கூறும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சர்வதேசத்தை நோக்கி இதுவரை, முறையாக பணியாற்றவில்லையா?

அல்லது, மேற்குலக அழுத்தங்களின் எல்லை இவ்வளவுதானா? மேற்குலகின் அழுத்தங்கள் இப்படித்தான் ஆமை வேகத்தில் – நத்தை வேகத்தில் இருக்குமென்றால் – அதை நம்பிக்கொண்டு தாயக தலைமைகள் அமைதியாக இருப்பது எந்தளவு சரியானது? சூழலை விளங்கிக்கொண்டு செயற்பட முயற்சிக்கும், தமிழ் தேசிய கட்சிகளை விமர்சிக்க – எதிர்க்க முற்படும் புலம்பெயர் குழுக்களிடம் ஆகக் குறைந்தளவாவது நியாயம் இருக்கின்றதா?

தர்க்க ரீதியாக நோக்கினால், தாரிக் அகமட்டின் கூற்று, புலம்பெயர் அமைப்புக்களின் தோல்வியை பறைசாற்றுகின்றது. எனவே, இந்த அடிப்படையில் நோக்கினால் – இப்போது, விமர்சிக்கப்பட வேண்டியவர்கள் புலம்பெயர் அமைப்புக்களாவர். ஆனால் இதற்காக நாம் புலம்பெயர் அமைப்புக்கள் அனைத்தின் மீதும் குற்றம்சாட்ட முடியாது. புலம்பெயர் அமைப்புக்களோ அல்லது தாயகத்தில் இருக்கும் கட்சிகளோ – எவராக இருப்பினும், ஓர் எல்லைக்கு மேல் எதனையும் செய்ய முடியாது. இதுதான் யதார்த்தம். இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டால், ஆறு பிரதான கட்சிகளின் கூட்டு முயற்சியையும் புரிந்துகொள்ள முடியும். இதனை புரிந்து கொள்ள மறுத்தால், முதலில் குற்றவாளிக் கூண்டில் ஏற வேண்டியவர்கள் புலம்பெயர் அமைப்புக்களாவர்.

# கரன்னாகொடவை சாடிய பொன்சேகா!

அலசுவது இராஜதந்திரி



இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரு தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றில் தாம் நிகழ்த்திய கொள்கை விளக்க உரையின் போது குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தின்போது பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத்தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட கொழும்பில் பதினொரு மாணவர்களை கடத்திச்செல்லப்பட்டு கொலை செயயப் பட்டது சம்பந்தமாக விசாரிக்கப்படவேண்டுமென குறிப்பிட்டிருந்தார். அத்துடன் இது சம்பந்தமாக பாதிப்புற்ற தரப்புக்கு நியாயம் கிடைக்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

வெறுமனே வார்த்தைகளாக மட்டுமே மனித உரிமைகள் பற்றி பேசப்படுகின்றதே தவிர நடைமுறைச்சாத்தியமாக எதுவும் காணப்படவில்லை எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

பாராளுமன்றில் கொள்கை விளக்க உரையை நிகழ்த்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் இராணுவத்தில் ஒன்றாகப் பணியாற்றியவர்கள். அத்துடன் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றஞ் சுமத்திய முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தபோது அவரோடு இணைந்தே இறுதிக்கட்ட யுத்தத்தை முன்னெடுத்திருந்தார். இவை யாவற்றுக்கும் மேலாக இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ யுத்தம் மும்முரமாக இடம்பெற்ற வேளை பாதுகாப்புத்துறை செயலாளராக பணியாற்றியிருந்தார்.

இந்நிலையில் மனித உரிமைகள் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உரைக்கு பதிலளித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அவரது காலப் பகுதியைச் சேர்ந்த கடற்படைத்தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொடவை 2008ஆம் ஆண்டுக்கும் 2009ஆம் ஆண்டுக் கும் இடைப்பட்ட காலப்பகுதியல் பதி னொரு மாணவர்கள் கொழும்பில் அவர்கள் சார்ந்தோரிடமிருந்து கப்பமாக பணம் பெறப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டமை குறித்து விசாரிக்க வேண்டுமென்று தெரிவித்திருந்ததார்.

பீல்ட் மார்ஷலின் இந்த பாராளுமன்ற உரை, எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கையின் தமிழ் தரப்புக்கு மேலும் வலுச்சேரப்பதாகவும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

புத்த பகவானின் போதனைகளில் எப்போதுமே உண்மை, தர்மம் என்பவை மிக முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடியும்.

உண்மை பற்றி புத்த பகவான் குறிப்பிடுகையில் அதனை பிரமாண்டமானதும் எக்காலத்திலும் எவராலும் மறைத்துவிட முடியாத சக்தி எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை பற்றி புத்த பகவான் கூறியது இதுவே : “சூரியனை எந்த சக்தியாலும் மறைக்க முடியாது. அது போலவே உண்மையையும் எக்காலத்திலும் எச்சக்தியாலும் மறைத்துவிட முடியாது. உண்மை எப்போதும் ஒளி வீசியதாகவே இருக்கும்.”


எனவே புத்தபகவான் கூறியதற்கு அமைவாகவே கொழும்பில் பதினொரு மாணவர்கள் 2008ஆம் ஆண்டுக்கும் 2009ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அவர்கள் சார்ந்தோரிடமிருந்து கப்பம் பெறப்பட்ட நிலையில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். இது சம்பந்தமாக தொடரப்பட்டிருந்த வழக்கு கூட நாளடைவில் முழுமையாக கைவிடப்பட்டிருந்தது.

இதைப்போல எண்ணிலடங்காத பாரதூரமான சம்பவங்கள் வடக்கு-கிழக்கு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் அப்பாவி மக்களைக்குறிவைத்து இடம்பெற்றிருந்தன.

கொழும்பில் வெள்ளளை வான் கடத்தல் சம்பவங்களும் ஏராளமாக இடம்பெற்றதோடு, ஆட்கடத்தல்கள் உயிராபத்துக்களை ஏற்படுத்துவதற்காக மட்டுமல்ல. கப்பம் போன்ற பணம் பறிக்கும் நடவடிக்கைகளுக்காகவும் ஆட்கள் கடத்தப்பட்டிருந்தனர். வடக்கு - கிழக்கில் மாத்திரமல்ல. வெளி மாவட்டஙஙகளிலும் பாரதூரமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

இத்தகைய பின்னணியில் வடக்கு-கிழக்கு யுத்தத்தின் போது ஒரு முக்கிய கதாபாத்திரமாகவே விளங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கொழும்பில் கடத்தப்பட்ட பதினொரு மாணவர்கள் தொடர்பாக குறிப்பிட்ட நிலையில் அச்சம்பவம் பற்றி மட்டுமல்ல. அக்காலப்பகுதியில் இடம்பெற்ற அதையொத்த வேறு சம்பவங்கள் குறித்தும் உரிய விசாரணைகளை நடத்தி உண்மைகளை வெளிப்படுத்துவதன் மூலமே மனித உரிமைகள் குறித்து பேசுவதற்கு அருகதையுடைய நாடாக இலங்கை இருக்க முடியும். •

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜனவரி - 22 சனிக்கிழமை**
**பிலவ வருடம் - தை 9**
**நல்ல நேரம் : 7.30 - 09.00**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : பஞ்சமி**




**மேடம்**
சோகமாக இருந்த உங்களின் முகம் இனி மலர்ச்சி அடையும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். நல்லோர் ஆதரவு கிடைக்கும். முகத்தில் அழகும், மனதில் இளமையும் கூடுதலாகும்.

**இடபம்**
சொந்தப்பணியுடன் மற்றவற்றையும் பார்க்க வேண்டி வரும். இன்று அலைச்சல் அதிகரிக்கும். நற்பலன்கள் கூடும். வீட்டில் சுபவிசேஷ ஏற்பாடுகளை செய்வீர்கள

**மிதுனம்**
புதிய வாகனம் வாங்குவீர்கள். மனதில் கருணை அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை அடைப்பீர்கள். தந்தைக்கு நன்மை வரும்.குழந்தைகளின் வாழ்வில் மகிழ்ச்சிக்குரிய சம்பவம் வரும்.

**கடகம்**
பாராட்டுக் கிடைக்கும். முன்னேறும் எண்ணம் உருவாகும். முக்கியஸ்தர் ஒருவரின் நட்பு கிடைக்கும். கர்வம் வராமல் கவனம் தேவை. வழக்குகளின் போக்கு மாறி சாதகமான நிலை உருவாகும்.

**சிம்மம்**
புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். மகிழ்ச்சி கூடும்.சலவுகளைச் சமாளிப்பீர்கள். வாழ்வில் முன்னேற எண்ணுவீர்கள். சொந்த பந்தங்கள் வியக்கும்படியான செயல் ஒன்றை செய்வீர்கள்.

**கன்னி**
பேச்சினால் நன்மை உண்டு. மனத்திருப்தி வரும். ஆடை, ஆபரணம் சேரும். வாழ்வில் சலிப்பு வர வேண்டாம். மன உளைச்சல் அகலும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**துலாம்**
சாதுர்யமான செயல்களின் மூலம் அனைவரையும் கவருவீர்கள். உங்கள் நற்பெயரைக் கெடுத்துக் கொள்ளாதபடி கவனமாக இருங்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் உங்களது புகழ் கூடும்.

**விருட்சிகம்**
சாமர்த்தியம் கூடும். உழைப்பில் சோம்பல் வேண்டாம். உங்களின் கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும். தாயின் அன்பை பெறுவீர்கள். குடும்பத்தில் ஒருவர் சாதனை புரிவார். புதிய வாகனம் வாங்குவீர்.

**தனுசு**
வீணாக வம்பு எதிலும் சிக்கிக் கொள்ளாதீர்கள். பணிச்சுமை கூடும். பொருளாதார நெருக்கடிகளில் இருந்து சிரமப்பட்டு விடுபடுவீர்கள். உங்களது உழைப்பால் சாதகமான சூழ்நிலை உண்டாகும்.

**மகரம்**
குடியிருக்கும் வீட்டைப் புதுப்பிக்க வேண்டி வரும். பணியாளர்கள் பிறரது விஷயங்களில் தலையிட வேண்டாம். எந்த விஷயத்திலும் அதிக கவனத்துடன் செயல்படுங்கள்.

**கும்பம்**
பொருளாதாரத்தில் ஓரளவு திருப்பத்தைக் காண முடியும். பணியாளருக்கு அதிக வேலைப்பளு உண்டானாலும் நற்பலன் தரும். நீங்கள் எதிர்பார்த்த விஷயங்களில் சிறு தளர்ச்சி தோன்றலாம்.

**மீனம்**
பணியிடத்தில் இருந்த தொல்லைகள் விலகும். விரயங்கள் சுபமாக மாறும். உங்களின் முயற்சியில் நல்ல திருப்பம் ஏற்படும். எதிர்பாராத வகையில் ஆன்மிகச் செயல் ஒன்றைச் செய்வீர்கள்.

# இலங்கைக்கு கடன் உதவி கொடுக்கும் போது இந்தியா நிபந்தனை விதிக்க வேண்டும்

## *மத்திய அரசை வலியுறுத்துகின்றார் ராமதாஸ்*

*சென்னை, ஜன. 22,*

இலங்கைக்கு ரூ.18,090 கோடி கடன் வழங்கும் இந்திய அரசு நிபந்தனைகள் விதிக்க வேண்டும் என வலியறுத்தியுள்ள பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் எஸ்.ராமதாஸ், அதற்கான சில விடயங்களையும் பட்டியலிட்டுள்ளார்.

இது தொடர்பில் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

“வரலாறு காணாத கடன் மற்றும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு உணவு மற்றும் எரிபொருள் வாங்குவதற்காக ரூ.18,090 கோடி கடன் வசதியை இந்திய அரசு வழங்கியிருக்கிறது. மத்திய அரசின் இம்முடிவு இராஜதந்திர நடவடிக்கை என்றாலும் கூட, இலங்கை



அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வதற்கான சிறந்த வாய்ப்பாக இதை இந்திய அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சீனாவின் பக்கம் சாய்ந்து கொண்டிருந்த இலங்கை அரசை இந்தியாவின் பக்கம் திருப்புவதற்கான இராஜதந்திர நடவடிக்கையாகவே இந்த கடனுதவி பார்க்கப்படுகிறது. ஆனால், கச்சத்தீவு உள்ளிட்ட நிலப்பரப்பையும், கோடிக் கணக்கில் நிதியுதவியையும் பெற்றுக் கொண்டு, பல்வேறு தருணங்களில் இந்தியாவுக்கு துரோகம் செய்த இலங்கை அரசு, இம்முறையாவது நமது உதவியை பெற்றுக் கொண்டு ஆதரவாக இருக்குமா என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இந்தியாவின் பாதுகாப்பு சார்ந்த இந்த அம்சத்தைக் கருத்தில் கொண்டு, இலங்கையை சீனாவிடம் இருந்து பிரிக்கும் நோக்குடன் கடனுதவி வழங்கும் அதே நேரத்தில், இந்தியாவுக்கு ஆதரவான இலங்கைத் தமிழர்களை அரசியல் ரீதியாக வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ள வேண்டும்” எனவும் ராமதாஸ் தெரிவித்திருக்கிறார்.

# தமிழக ஊர்தி இடம்பெறாமைக்கு தமிழக அரசுதான் முழுப்பொறுப்பு

## *பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை*

*சென்னை, ஜன. 22,*

புதுடில்லியில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பில் தமிழக ஊர்தி இந்த ஆண்டு இடம்பெறாததற்கு முழுப் பொறுப்பு தமிழக அரசுதான் என்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கூறினார்.

இது தொடர்பில் அவர் கூறியதாவது:-

கடந்த 3 ஆண்டுகளில் நடந்த குடியரசு தின விழா அணிவகுப்பில் தமிழக வாகனம் இடம் பெற்றிருந்தது. அப்படி இருக்கும்போது இந்த ஆண்டு இடம் பெறவில்லை என்றால் அதற்கு முழுப் பொறுப்பு தமிழக அரசுதான். அப்போது பணியாற்றிய அதே அரசு அதிகாரிகள்தான் தற்போதும் பணியாற்றி வருகிறார்கள். தற்போது ஏன் அவர்



கள் சரிவர வேலை செய்யவில்லை?

குடியரசு தின விழாவில் தமிழகத்தின் பங்களிப்பு இல்லாதது வருந்தக்கூடியது. இதை அடுத்த ஆண்டு சரி செய்ய அனைவரும் முயற்சி எடுக்க வேண்டுமே தவிர மத்திய அரசின் மீது குற்றம் சொல்லி அதன் மூலமாக அரசியல் லாபத்தை தி.மு.க. தேடக் கூடாது.

தி.மு.க. அரசை பொறுத்தவரை மாதம் ஒரு கோட்டா வைத்துள்ளார்கள். அதன்படி இந்த மாத கோட்டாவில் முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் கே.பி.அன்பழகன் வீட்டில் சோதனை நடத்தியுள்ளார்கள். நீதிமன்றம் இருக்கிறது. இங்கு வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்திருக்கிறார்களா? என்பது உள்ளிட்ட அனைத்து விஷயங்களையும் நிரூபிக்க வேண்டும். அப்படி தவறு செய்திருந்தால் யாராக இருந்தாலும் தண்டனை கிடைக்க வேண்டும். இதில் எங்களுக்கு மாற்று கருத்து இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக தமிழகத்தை விரைவாக மாற்றுவோம்

## நம்பிக்கையுடன் சொல்கிறார் முதலமைச்சர் ஸ்டாலின்



*சென்னை, ஜன. 22,*

நல்லாட்சியின் அடையாளத்தை 6 மாதத்திலே பெற்றிருக்கிறோம் என்றும் தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக நிச்சயமாக மாற்றுவோம் என்றும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வழியாக, தர்மபுரி மாவட்டத்தில் பல திட்டங்களை நேற்று ஆரம்பித்த வைத்த பின்னர் உரையாற்றினார். நிகழ்ச்சியில் மு.க. ஸ்டாலின் தெரிவித்ததாவது:

ஒரு மாநிலத்தில் ஏராளமான முதலீடுகள் பல்வேறு நிறுவனங்களால் செய்யப்படுகிறது என்றால் அந்த மாநிலத்தில் நல்லாட்சி நடக்கிறது என்று பொருள். அந்த மாநிலத்தில் அமைதி நிலவுகிறது என்று பொருள். அந்த மாநிலத்தில் சட்டம்- ஒழுங்கு சீராக இருக்கிறது என்று பொருள். அந்த மாநிலம் வளர்ச்சிக்குரிய மாநிலமாக இருக்கிறது என்று பொருள். அந்த மாநிலத்தில் புதிய நிறுவனத்தை தொடங்கினால் அந்த நிறுவனம் வளரும் என்று பொருள்.

இதை எல்லாம் வைத்துப் பார்க்கும் போது எனக்கு மிகப்பெரிய நம்பிக்கை பிறக்கிறது. நமது தாய் தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக நிச்சயமாக நாம் ஆக்குவோம். ஆக்க முடியும், அதுவும் விரைவில் ஆக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு பிறக்கிறது” என அவர் தெரிவித்தார்.

# ஆய்வரங்க நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 22

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக "கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை" என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் எட்டாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு (இலங்கை நேரம்) இடம்பெறவுள்ளது.

அண்ணாமலை பல்கலைக் கழக கனடா வளாகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் " ஈழத்து மரபுவழி நாடகங்களின் மேம்பாட்டிலும் பேணுகையிலும் மரியசேவியர் அடிகளாரின் வகிபங்கு" "என்னும் தலைப்பில் யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் ஆசிரியரும்,திருமறைக் கலாமன்ற நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவருமான இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் அவர்கள் ஆய்வை வழங்கவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809, கடவுச்சொல் cpa என்பதற் கூடாக இந்நிகழ்வில் இணைந்து கொள்ள முடியும். (அ)

# எதிர்ப்பு அரசியலை உடன் கைவிட்டு ஒத்துழைக்கவேண்டும் கூட்டமைப்பு

## சுதந்திரக் கட்சி அழைப்பு

கொழும்பு, ஜன. 22

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பு அரசியலால் வடக்கு, கிழக்கு மக்களுக்கு எதுவும் நடக்கப்போவதில்லை. எனவே, எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு, அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்."

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ள அரச பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் 2ஆவது நாளாக நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர இந்த அழைப்பை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

எனக்கு முன்னர் உரையாற்றிய உறுப்பினர் (சிறிதரன் எம்.பி.), தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை எனவும், கவனிப்புகள் இல்லை என்ற தொனியிலேயே கருத்துகளை முன்வைத்திருந்தார். கொள்கை விளக்க உரையில் என்ன இருந்தாலும்,சொல்லை விடவும் செயல்தான் சிறந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு , அனைத்து இன மக்களையும் அரவணைத்து - ஒரு நாடாக சவால்களை எதிர்கொள்வதற்கே ஜனாதிபதி தலைமையிலான அரசு எதிர்ப்பார்கின்றது. அத்துடன், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமும் ஜனாதிபதிடம் இருக்கின்றது. எனவே, அந்த நடவடிக்கைக்கு நீங்கள் (கூட்டமைப்பு எம்.பிக்கள்) ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதுவே முக்கியத்துவம் மிக்கதாக இருக்கின்றது.

ஆட்சியில் இருக்கும் அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை விமர்சித்துக் கொண்டிருப்பதால் நாடு என்ற அடிப்படையில் முன்னோக்கி செல்ல முடியாது. நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கும் அதனால் எவ்வித நன்மையும் கிடைக்காது என்பதை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் வடக்கு, கிழக்குக்கென தனியான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நீங்கள் (கூட்டமைப்பினர்) நன்றிகூறாவிட்டாலும் கூட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதுகூட அனைத்து இன மக்களுக்கும் சேவைகள் வழங்கப்படுகின்றன. எனவே, சரியான விடயங்களை பாராட்டுங்கள். தவறுகள் இருந்தால் விமர்சனங்களை முன்வையுங்கள். அது உங்கள் கடமை- என்றார்.





# கிளிநொச்சி வைத்தியசாலையில் நள்ளிரவுவேளை பெரும் தீ விபத்து!

## பல உபகரணங்கள் தீ எயில் எரிந்து நாசம்

கிளிநொச்சி, ஜன. 22

**கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 11.45 மணியளவில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தினால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.**

கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் இராணுவத்தினரின் கடுமையான போராட்டத்தை அடுத்து தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இராணுவ தீயணைப்புப் பிரிவினரும் களத்தில் இறங்கி மேலும் தீ பரவாத வகையில் முழுமையாக கட்டுப்படுத்தினர்.

தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளர், இராணுவ உயர் அதிகாரிகள், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டவர்கள் நேரடியாக கண்காணித்தனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டு வருகிறது. இந்த தீ விபத்தினால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இதில் மார்பு சிகிச்சை பிரிவு, மார்பு சிகிச்சை ஆய்வு கூடம், பாலியல் நோய் தடுப்பு பிரிவு, பாலியல் நோய் ஆய்வு கூடம், களஞ்சியம், கதிர்வீச்சு பிரிவு ஆகிய பிரிவுகள் மிகவும் பாதிப்பை கண்டுள்ளன என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். தீ விபத்துக்கான காரணத் தைக் கண்டறிவதற்கான விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# சம்பிக்கவின் விபத்து வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 22

ராஜகிரிய விபத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கின் மேலதிக சாட்சி விசாரணை பெப்ரவரி 18 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இவ்வாறு உத்தரவிட்டது.

கடந்த தவணை சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் இதன் போது நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். (அ)

# கட்டுநாயக்க விமான நிலைய சுகாதார பாதுகாப்பு மோசம்!

கொழும்பு, ஜன. 22

கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுகாதார பாதுகாப்பு நிலைமை மிகவும் வருத்தமளிப்பதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

விமான நிலையத்தில் பணிபுரியும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் 6 பேருக்கு கோவிட் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதென சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட 6 பேர் இவ்வாறு கோவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். கடந்த காலங்களாக கட்டு நாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு தொடர்பில் சுகா தாரப் பிரிவுகளிடம் சுட்டிக் காட்டியிருந்தோம். எனினும் இந்த விடயம் தொடர்பில் பெரிதாக ஒருவரும் கண்டு கொள்ளவில்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரும் வெளிநாட்டவர்கள் மற்றும் இலங்கையர்கள் சுகாதாரப் பாதுகாப்பை மீறி செயற்படுகின்றார்கள். முகக்கவசம் அணிவதில்லை. அத்துடன் சுகாதார பரிசோதகர்களுக்கு ஓய்வு பெற அறையில்லாத நிலைமை ஒன்று காணப்படுகின்றது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றும் சுகாதார பரிசோதகர்கள் அனைவரும் கடமையில் இருந்து விலகவேண்டிய நிலைமை ஏற்படும்-என்றார். (அ)







கல்வியங்காடு சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய மேற்குப்புற அலங்கார தோரண நுழைவாயில் திறப்பு விழா இறைமாட்சி வைபவமும் கலாசார மண்டப புகுவிழாவும் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

( படங்கள் - ஐ.சிவசாந்தன்)

# ஜே.வி.பி. ஆட்சி அமைத்தால் 25 பேர் மட்டும் அமைச்சர்கள்

## அனுரகுமார திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜன. 22



**தமது அரசாங்கத்தின் கீழ் அமைச்சரவை 25 பேருக்கு மட்டுப்படுத்தப்படும் எனவும், ஒவ்வொரு அமைச்சுக்கும் திறமையானவர்கள் அடங்கிய குழுவை உருவாக்கவுள்ளதா கவும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் இயக்கத்தின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

மொறட்டுவ ரண்டிய ஹோட்டலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது தனிமனித மந்திர செயல் அல்ல. எனவே, எதிர்காலத்தில் எமது நாட்டில் அதிகபட்சமாக 25 அமைச்சுக்களும் 25 பிரதி அமைச்சுக்களும் அமையும். அதற்கு மேல் நம் நாடு செல்ல முடியாது. ஜப்பானுடன் ஒப்பிடும்போது 25 இக்கும் அதிகமாகும். ஆனால் உடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவேண்டும்.

எனவே, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அமைச்சுக்கள் தேவை. இப்போது நாம் சுகாதாரத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டால், சுகாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றவர்கள் என்று எங்கள் குழுவை அறிமுகப்படுத்துகிறோம். எமது நளிந்த ஜயதிஸ்ஸ ஒரு வைத்தியர். எங்கள் சிறப்பு மருத்துவர் நிஹால் அபேசிங்க. ராகம மருத்துவ பீடத்தின் பேராசிரியர் நிஷாந்த அபேசிங்க. அவர்கள் எங்கள் மருத்துவக் குழு.

இங்கே எங்கள் கல்விக்கு பொறுப்பான குழு உள்ளது. அவர்கள் சுகாதாரப் பாதுகாப்புக் குழு. அவர்கள்தான் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள். எமது பேராசிரியர் அனில் ஜயந்த, எமது சகோதரர் சுனில் ஹந்துன்நெத்தி, எமது சகோதரன் வசந்த சமரசிங்க, அவர்களே எமது பொருளாதாரத்திற்கு பொறுப்பான அணி.

இந்த நாட்டில் இதுவரை உருவாக்கப்பட்ட எந்த அமைச்சரையும் விட திறமையான, புரிந்துணர்வு, அர்ப்பணிப்பு மற்றும் நேர்மையுடன் கூடிய அமைச்சரவையை உருவாக்கி வருகிறோம். அந்த அமைச்சரவைக்கு நாட்டை ஆள்கின்ற திறமை உள்ளது-என்றார். (அ)

# டக்ளஸ்ும் நேரில் விஜயம்

கிளிநொச்சி, ஜன. 22

கிளிநொச்சி வைத்தியசாலையில் தீ விபத்து ஏற்பட்ட பகுதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார். நேற்றுக் காலை வைத்திய சாலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர், சம்பவ இடத்தை பார்வையிட்டதுடன், சம்பவம் தொடர்பில் கேட்டறிந்தார்.

தொடர்ந்து கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி சரவணபவன், ; வைத்திய சாலைப் பணிப்பாளர் சுகந்தன் மற்றும் வைத்தியர்களுடன் விசேட கலந்துரையாடலிலும் அவர் ஈடுபட்டார்.

இதேவேளை, இந்த தீ விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# காணாமற்போன மகனை தேடிய மற்றுமொரு தாயார் உயிரிழப்பு!

வவுனியா, ஜன. 22

வவுனியாவில் காணாமற்போன தனது மகனைத் தேடி வந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக நேற் மரணமடைந்தார்.

வவுனியா பூம்புகார் கல்மடு பகுதியை சேர்ந்த கருப்பையா ராமாயி (வயது-78) என்ற தாயே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது வளர்ப்புமகனான ரா.இந்திரபாலன் (வயது-38) கடந்த 2007 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து வெள்ளைவானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

அவரைத் தேடி வவுனியாவில் கடந்த 1799 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்திலும் இந்த தாய் கலந்துகொண்டு தனது மகனை கண்டுபிடித்து தரப் போராடியிருந்தார்.

இந்நிலையில் மகனை காணாமலேயே அவர் நேற்று மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொரளை குடியிருப்பு தொகுதியொன்றில் தீ!

கொழும்பு, ஜன. 22

கொழும்பு, பொரளை-கித்துல்வத்த பிரதேசத்தில் உள்ள குடியிருப்பு தொகுதியொன்றில் நேற்று வெள்ளிக்கிழமை காலை தீ விபத்து ஏற்பட்டது.

தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு கொழும்பு மாநகரசபையின் 3 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன.

இதனையடுத்து, தீப்பரவல் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் மற்றும் சேத விபரங்கள் தெரிய வராத நிலையில் பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# களனிதிஸ்ஸ மின் நிலையத்துக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல்!

கொழும்பு, ஜன. 22

வாக்குறுதியளித்தவாறு 10,000 மெற்றிக் தொன் டீசலை களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்துக்கு வழங்க கனிய வளக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு இந்த எரிபொருள் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்துக்கு கிடைத்ததாக அதன் பிரதான பொறியியலாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று முன்தினம் மதியம் வரையில், களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டு மின்பிறப்பாக்கிகளையும் தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் மீளிணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தில் இருந்து நாளொன்றுக்கு 286 மெகாவோட் மின்சாரம், தேசிய மின்சாரக் கட்டமைப்புக்கு இணைக்கப்படுகின்றது. இதற்காக, நாளொன்றுக்கு ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 800 மெற்றிக் தொன் வரையிலான டீசல் அவசியமாகின்றது.

இதன்படி, கனியவளக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ள டீசல் தொகையானது, மேலும் 8 நாட்களுக்கு மின்னுற்பத்திக்கு போதுமானதாகும்-என்றார்.

# மிதிகமவில் துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி!

கொழும்பு, ஜன. 22

மிதிகம பிரதேசத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மிதிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துர்கி கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

படுகாயமடைந்த 46 வயதுடைய நபர் வலான வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேக நபரை அடையாளம் கண்டுள்ளதாகவும், அவரை கைது செய்ய விசாரணை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வவுனியா மாவட்டத்தில் 2 மாதங்களில் 20 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

## பிராந்திய சுகாதார பணிப்பாளர் மகேந்திரன்

வவுனியா, ஜன. 22

வவுனியா மாவட்டத்தில் டிசம்பர் மற்றும் தற்போது வரை 20 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா பெரியார்குளத்தில் நகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டெங்கு நோயாளர் பொதுவாகவே டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையை சுகாதாரத் திணைக்களத்தினாலேயே செய்ய வேண்டும் என்று பொதுவாக எல்லோரும் எண்ணுகின்றனர். தற்போது நகரசபை இவ்வாறான நிகழ்வுகளை முன்னின்று செய்வது வரவேற்கத்தக்க விடயம். டெங்கு என்பது சுகாதாரப் பிரச்னை மட்டுமல்ல இது ஒரு சமூகப் பிரச்னையாகும்.

டெங்கு நோயை பரப்பும் நுளம்புகளை நாங்கள் தடுப்பதன் மூலமே டெங்கைத் தடுக்க முடியும். மேலும் இதற்குரிய முயற்சியாகவே நகரசபை தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு நடைபெறுகிறது.

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரை டெங்கு கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் எமக்கு அண்மையில் உள்ள யாழ்.மாவட்டம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கத்தின் வீரியம் அதிகமாக காணப்படுகின்றது. இவ்விரு மாவட்டங்களிலும் கடந்த வருட ஆரம்பத்தில் டெங்கு நோயாளர்களின் பெருக்கத்தை விட இந்த ஆண்டு ஆரம்பத்தில் பெருக்கம் மிக அதிகமாக காணப்படுகின்றது. இதேபோன்று திருகோணமலை மாவட்டத்திலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. அதேபோன்று கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது.

குறிப்பாக மேற்கூறிய மாவட்டங்களுக்கு வவுனியா மாவட்ட மக்கள் பல்வேறு தேவைகளுக்காக சென்று வர வேண்டிய தேவையுள்ளது. இவ்வாறு போய் வருபவர்கள் மூலமாகவே வவுனியாவில் டெங்கு நோய் தொற்றாளர்களை அடையாளம் கண்டுள்ளோம்.

கடந்த மாத்தை பொறுத்தவரை வவுனியா மாவட்டத்தில் 09 பேரே டெங்கு நோய் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். 2022 ஜனவரி மாதம் தற்போதுவரை 11 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளர். மாதம் முடிவில் குறித்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது-என்றார். (அ)

# இரும்புக்கம்பியால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை!

கொழும்பு, ஜன. 22

இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பதுளை எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலுக்கொடை தோட்டத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலுக்கொடை தோட்டம், உடு கும்பல்வெல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயது குடும்பஸ்தரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரும் தாக்குதலில் காயமடைந்துள்ள நிலையில் பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# திருடி தின்பதுதான் அரசின் கொள்கை!

## சபையில் ஜே.வி.பி. விமர்சனம்



கொழும்பு, ஜன. 22

**திருடி சாப்பிடுவது, கடனுக்கு சாப்பிடுவது மற்றும் விற்று சாப்பிடுவதே அரசாங்கத்தின் கொள்கை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தனது இரண்டாண்டு ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளிடம்இருந்து கடனை பெறவில்லை என ஜனாதிபதி தனது சிம்மாசன உரையில் குறிப்பிட்டார்.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியிலேயே அதிகளவில் கடன் பெறப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த கடன் 21 ட்ரில்லியன் ரூபா. இதில் 8 ட்ரில்லியன் ரூபா கடன் கோட்டாபயவின் ஆட்சிக்காலத்திலேயே பெறப்பட்டுள்ளது.

தற்போது சோறு வழங்கிய தந்தையாக சீனாவின் ஜனாதிபதி ஷீ ஜின்னை மக்கள் கூற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# கிளிநொச்சியில் ஓட்டோ விபத்து!

## சாரதி படுகாயம்

கிளிநொச்சி, ஜன. 22

கிளிநொச்சியில் ஓட்டோ விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

வட்டக்கச்சி சென்று திரும்புகையில் பஸ் ஒன்றுக்கு இடம் கொடுக்க முற்பட்ட போது இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து கிளிநொச்சி குளத்தின் துருசு பகுதியில் உள்ள பாலத்தில் விழுந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சி உதயநகர் மேற்கு பகுதியைச் சேர்ந்த தியாகராசா சிவநாதன் (வயது-54) என்பவரே சம்பவத்தில் காயமடைந்தார். இவர் சிகிச்சைக்கு அனுமதிக்க முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, இவருடன் பயணித்த மற்றொருவரை காண வில்லை என ஓட்டோச் சாரதி வாக்குமூலம் வழங்கியுள்ளார். (அ)

# அரச அதிபர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியசாலை நிலைமையை நேரில் பார்வை

கிளிநொச்சி, ஜன. 22

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தீ விபத்து ஏற்பட்ட பகுதியை மாவட்ட அரச அதிபர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் நேற்றுக் காலை பார்வையிட்டனர்.

நேற்று காலை வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் சம்பவ இடத்தை பார்வையிட்டதுடன், சம்பவம் தொடர்பில் கேட்டறிந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி சரவணபவன், வைத்தியசாலைப் பணிப்பாளர் சுகந்தன் மற்றும் வைத்தியர்களுடன் இவர்கள் விசேட கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் இதுவரை முழுமையாக வெளியாக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஔடத, மருந்தாக்கல் கூட்டுத்தாபனங்களுக்கு 16.3 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு!

கொழும்பு, ஜன. 22

ஔடத கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் என்பவற்றுக்கு திறைசேரியின் உத்தரவுக்கு அமைய அரச 16.3 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டுள்ளது.

ஔடத உற்பத்திகள், வழங்குகை மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இதனை தெரிவித்தார்.

அதற்கமைய அரச ஔடத கூட்டுத்தாபனத்துக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக 11 மில்லியன் அமெரிக்க டொலரும், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு 5.3 மில்லியன் அமெரிக்க டொலரும் வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# மருத்துவரை ஏமாற்றிய 20 வயது யுவதி கைது

கொழும்பு, ஜன. 22

இலங்கையில் கோவிட் வைரஸ் பரவ ஆரம்பித்த 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முகக் கவசங்களை வழங்குவதற்காக கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தில் மருத்துவர் ஒருவரிடம் பெற்றுக்கொண்ட நான்கு லட்சம் ரூபாயை மோசடி செய்த 20 வயது யுவதி கைது செய்யப்பட்டுள்ளார்.

யுவதியை தவிர முதியவர் ஒருவரையும் கொழும்பு மத்திய குற்றப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாளிகாவத்தை பகுதியை வசிப்பிடமாக கொண்ட மருத்துவர், கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய யுவதியும் 80 வயதான நபரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# சு.க. வெளியேறினாலும் அரசு கவிழ்ந்துவிடாது!

## அமைச்சர் பிரசன்ன கூறுகிறார்

கொழும்பு, ஜன. 22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியிடம் காட்டிக்கொடுத்த காரணத்தால், கைவிடப்பட்ட உண்மையான சுதந்திரக் கட்சியினருக்கு பொதுஜன பெரமுனவை ஆரம்பித்தன் காரணமாகவே பாதுகாப்பு கிடைத்தது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதனால், நல்லாட்சி அரசாங்கத்துக்கு பின்னால் சென்ற மைத்திரி உள்ளிட்ட குழுவினர் விலகினாலும் அரசாங்கம் கவிழாது எனவும் அவர் கூறினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே பிரசன்ன ரணதுங்க இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது அரசாங்கத்தின் மீது சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறது. அவர்கள் விலகினாலும் அரசாங்கம் கவிழாது. மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவை ஆரம்பித்ததன் காரணமாகவே சுதந்திரக் கட்சியினர் பாதுகாக்கப்பட்டனர்.

பொதுஜன பெரமுன ஆரம்பிக்கப்படவில்லை என்றால், சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சிக்கு காட்டிக் கொடுத்த காரணத்தினால், கைவிடப்பட்ட உண்மையான சுதந்திரக் கட்சியினருக்கு செல்ல இடம் இருந்திருக்காது.

பொதுஜன பெரமுனவை ஆரம்பித்ததன் காரணமாகவே சுதந்திரக் கட்சியினருக்கு பாதுகாப்பு கிடைத்தது. இதனை மறந்து அன்று நல்லாட்சி அரசாங்கத்தின் பின்னால் சென்றவர்கள் தற்போது செயல்பட்டு வருகின்றனர்.

இவர்கள் ராஜபக்ஷவினரையும் அரசாங்கத்தையும் விமர்சிப்பது புதினம் அல்ல. இவர்களின் தலைவர் மைத்திரி பால சிறிசேன, அப்பத்தை சாப்பிட்டுவிட்டு, சென்றே ஐக்கிய தேசியக் கட்சிக்கு முட்டுக்கொடுத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இணைத்துக்கொள்ள வேண்டாம், மைத்திரியுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு வாக்களிக்கவேண்டாம் என்ற நிலைப்பாட்டிலேயே நான் ஆரம்பத்தில் இருந்தே இருந்து வருகிறேன்-என்றார். (அ)

# சாரத்தை தைத்துக் கொள்வதற்கு முன்னரே காற்சட்டை கழற்றியதுபோல் அரசின் செயல்!

## சாடுகின்றார் டிலான் பெரேரா



கொழும்பு, ஜன. 22

சாரம் தைத்துக் கொள்வதற்கு முன்னரே காற்சட்டையை கழற்றியது போன்ற காரியத்தை அரசாங்கம் செய்து கொண்டது என ஆளும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் தொடர்பிலான சுயவிமர்சனம் செய்வதென்றால் நான் அரசாங்கத்தின் சார்பில் ஒரு விடயத்தை ஒப்புக் கொள்கின்றேன். எங்களுக்கு அந்நிய செலாவணி வருமானம் கிடைக்கப் பெற்ற ஓர் வழியாக தேயிலை உற்பத்தி காணப்பட்டது.

சேதனப் பசளை முறையை தேயிலை உற்பத்தியில் அமுல் படுத்தியதனால் தேயிலையால் கிடைக்கப் பெற்ற அந்நிய செலாவணி வருமானம் குறைந்துள்ளது.

சுய விமர்சன அடிப்படையில் இந்த விடயத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

சாரத்தை தைத்துக்கொள்ள முன்னரே காற்சட்டையை கழற்றியது போன்றதொரு நிகழ்வாகவே இதனை கருத வேண்டும்-என்றார். (அ)

# இலங்கைக்கு உதவத் தயார்!

## தென் கொரிய சபாநாயகர் வாக்குறுதி

கொழும்பு, ஜன. 22

இலங்கையின் வேலை வாய்ப்பு, தொழிற்பயிற்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு தென்கொரிய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் என தென் கொரிய தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் - சியோக் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பார்க் பியோங்-சியோக்குமிடையில், நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஆசியாவின் கேந்திர நிலையமான இலங்கைக்கு, ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள கொரிய முன்னணி நிறுவனங்களை ஊக்குவிக்குமாறு பார்க் பியோங்-சியோக்கிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். (அ)

# நினைவில் வாழும் "தேனீ" ஜெமினி கங்காதரன் ! மாற்றுச்சிந்தனைக்கு களம் வழங்கிய கர்மயோகி



## இன்று அவர் மறைந்து ஒரு வருடம்

**தேனீ இணைய இதழை நீண்டகாலமாக தனிமனிதராக ஓர்மத்துடன் நடத்தி, மாற்றுச் சிந்தனைகளுக்கு சிறந்த களம் வழங்கினார். அரசியல் ஆய்வுத் தொடர்களுக்கும் கலை, இலக்கிய படைப்புகளுக்கும் பயனுள்ள நேர்காணல்களுக்கும் மொழிபெயர்ப்புகளுக்கும் களம் வழங்கி, வாசகர்களிடம் சேர்ப்பித்தவர்**

முருகபூபதி

கண்ணுக்குத் தெரியாத எதிரியான கொரோனோ உலகடங்கிலும் உக்கிரத்தாண்டவம் ஆடத் தொடங்கிய காலப்பகுதியில், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி எங்கள் இனிய தோழர் - தேனீ இணைய இதழின் ஆசிரியர் ஜெமினி கங்காதரனையும் அது ஜெர்மனியில் காவுகொண்டுவிட்டது.

அவர் மறைவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் அதாவது, 2020 நவம்பர் மாதமளவில், தானும் இத்தொற்றுக்கு ஆளாகி சிகிச்சை பெற்று வந்திருப்பதாகச் சொல்லியிருந்தார். அந்தச்செய்தி சற்று ஆறுதலைத் தந்திருந்தாலும், அவர் பூரண குணமடையவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தேன். நான் மட்டுமன்றி தோழர் ஜெமினி கங்காதரனை நேசித்த உலகடங்கிலும் வாழ்ந்த அவரது தேனீ வாசகர்களும் நண்பர்களும் அத்தகைய வேண்டுதலுடனேயே இருந்தனர்.

அவரைத் தொடர்புகொண்டு உரையாடியபோது, தொற்றின் தாக்கம், அதற்காக பெற்றுக்கொண்ட சிகிச்சை பற்றியெல்லாம் அவர் சற்றுச்சோர்வுடன் தான் சொன்னார்.

எனினும் அவரது உயிரைப்பறித்த அந்த கண்ணுக்குத் தெரியாத எதிரிக்கு, எனதும் மற்றவர்களினதும் உருக்கமான வேண்டுதல் எட்டவில்லை போலும்.

இலங்கை வடபுலத்தில் புங்குடுதீவில் 09.01.1965 ஆம் திகதி கணேஷ் - மங்கையற்கரசி தம்பதியரின் செல்வப்புதல்வனாகப்பிறந்த ஜெமினி கங்காதரன் யாழ். இந்துக்கல்லூரியில் படித்தவர்.

இளம்வயதிலேயே இனவிடுதலைப் போராட்டத்தில் தன்னையும் இணைத்துக்கொண்டு ஈரோஸ் இயக்கத்தில் இயங்கியவர்.

தாயகத்தில் வாழமுடியாத சூழல் தோன்றியதும் ஐரோப்பாவுக்கு புலம் பெயர்ந்து, அங்கும் இனவிடுதலை குறித்த செயற்பாடுகளிலேயே தன்னை அர்ப்பணித்திருந்தவர்.

ஈழவிடுதலைப்போரில் சகோதரப் படுகொலைகளை சகியாமல் மாற்றுச் சிந்தனையாளர்களுடன் இணைந்து ஊடகத்துறையில் ஈடுபட்டார்.

1989 ஆம் ஆண்டு தொடக்கத்தில் தோழர்களுடன் இணைந்து தேனீ இதழை ஆரம்பித்தார். கலை, இலக்கிய, அரசியல், சமூக அக்கறை சார்ந்த படைப்புகளுக்கு தேனீ களம் வழங்கியது.

அதன்பின்னர் அக்கினி என்ற இதழையும் சிறிதுகாலம் நடத்தி னார். அதன்பின்னர் தேனீ இணைய இதழை தொடங்கி தினமும் பதிவேற்றினார்.

மெல்பன் நண்பர் எழுத்தாளர் நடேசன், எனக்கு தேனீ இணைய இதழை அறிமுகப்படுத்தினார். முதலில் அவர் ஊடாகவே எனது ஆக்கங்களை ஜெர்மனியிலிருந்து வெளிவந்த தேனீ இணைய இதழுக்கு அனுப்பினேன். அவற்றை ஏற்று தொடர்ச்சியாக பிரசுரித்த ஜெமினி கங்காதரன், என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, தோழமை பூண்டார்.

இவ்வாறு சகோதர வாஞ்சையுடன் பழகியவருக்கு கடந்த 2020 மார்ச் மாதம் கொரோனோ தொற்று வந்ததையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பி தொலைபேசி ஊடாக இரண்டு தடவைகள் உரையாடினார்.

அவரது குரலில் சோர்வு இழையோடியது. முற்றாகத்தேறியபின்னர் (2020 ) ஜூன்மாதம் முதல் மீண்டும் தேனீயை இயக்கவிருப்பதாகவும் சொன்னார்.

கொரோனோ தொற்றின் அறிகுறிபற்றி நான் கேட்டபோது, "அனைவரும் சொல்வதுபோன்று, தனக்கு தடிமன், காய்ச்சல், இருமல் வரவில்லை என்றும், உடலில் நடுக்கமும் பலவீனமும் இருந்தது, அத்துடன் என்னையறியாமல் வாய்பிதற்றினேன். தாமதியாமல் சிகிச்சைக்கு சென்றபோது தான், தனக்கும் கொரோனோ தொற்று ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் சொன்னார்கள் எனவும், தனியறையில் வைத்து தன்னை மிகுந்த அக்கறையுடன் கவனித்தார்கள்"என்றும் சொன்னார்.

தான் இந்தத் தொற்றிலிருந்து முற்றாக நீங்கி தேறிவந்துவிடுவேன் என்ற நம்பிக்கை அவரது வார்த்தைகளில் புலப்பட்டது.

எனினும் அடுத்துவந்த மாதங்களில் அவருடனான தொடர்பாடல் துண்டிக்கப்பட்டுவிட்டது. அவரது தொலைபேசி இலக்கங்களுக்கு பல தடவை தொடர்புகொண்டபோதிலும் இணைப்பு கிடைக்கவில்லை. அவருக்கு நெருக்கமான தோழர்கள் இலங்கையில் கருணாகரன், பிரான்ஸில் ராயப்பு அழகிரி, அவுஸ்திரேலியாவில் நடேசன் ஆகியோருடன் உரையாடி மேலதிக தகவல்களை பெறுவதற்கு முயற்சித்தபோதிலும் பலிதமாகவில்லை.

ஜெமினியுடன் நெருக்கமான உறவைப்பேணிய தோழர்கள் ஜெமினி திடீரென மறைந்தபின்னர் நடத்திய மெய்நிகர் காணொளி கலந்துரையாடலில் ஜெமினியின் சிறப்பியல்புகள், அவரது மாற்றுச்சிந்தனை தொடர்பான கலகக்குரல் பற்றியெல்லாம் விதந்துரைத்தனர்.

அவர் எத்தகைய நெருக்கடிகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் மத்தியிலிருந்து இயங்கியிருக்கிறார் என்பதையும் அவர்களின் உரைகளிலிருந்து தெரிந்துகொள்ளமுடிந்தது.

தேனீ தினமும் சுமார் நாற்பதினாயிரம்பேர் பார்த்து வாசிக்கும் ஊடகமாக அது விளங்கியதையும் அறிவேன்.

தேனீ இணைய இதழை நீண்டகாலமாக தனிமனிதராக ஓர்மத்துடன் நடத்தி, மாற்றுச் சிந்தனைகளுக்கு சிறந்த களம் வழங்கினார். அரசியல் ஆய்வுத் தொடர்களுக்கும் கலை, இலக்கிய படைப்புகளுக்கும் பயனுள்ள நேர்காணல்களுக்கும் மொழிபெயர்ப்புகளுக்கும் களம் வழங்கி, வாசகர்களிடம் சேர்ப்பித்தவர். அதற்காக எந்த ஊதியமும் பெறாமல் கருத்துக்களையும் எதிர்வினைகளையும் விமர்சனங்களையும் மாத்திரமே பெற்றுக்கொண்டவர்.

எனினும், தேனீயில் வரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பு என்ற ஊடக தர்மத்தை பின்பற்றி, பாரதூரமான விமர்சனங்கள் அதற்கு வரும் பட்சத்தில், அவற்றை உரியவர்களுக்கே சேர்ப்பித்து கவனத்திற்குட்படுத்தி ஊடக தர்மத்தின் கண்ணியத்தையும் காப்பாற்றினார்.

ஆங்கில ஊடகங்களில் ஏதேனும் சிறந்த அரசியல் ஆய்வுகள் வெளிவரும் பட்சத்தில் அவற்றை தெரிவுசெய்து இலங்கைக்கு அனுப்பி அங்கிருந்து குமார் என்ற மொழிபெயர்ப்பாளரிடமிருந்து மொழிமாற்றம் செய்து தருவித்து, தானே கணினியில் பதிவுசெய்து வெளியிட்டார்.

மணியம் என்பவர் தொடர்ச்சியாக எழுதிய ஈழப்போராட்டத்தின் உறைபொருளும் மறைபொருளும் தொனித்த நீண்ட கட்டுரைத் தொடரை தோழர் ஜெமினி கங்காதரனே தினமும் கண்விழித்திருந்து பதிவுசெய்து தேனீயில் வெளியிட்டார். கணினியில் தமிழில் பதிவு செய்யத் தெரியாத பலரதும் ஆக்கங்களையும் கையெழுத்துப்பிரதியில் பெற்றும் பதிவுசெய்து வெளியிட்டார்.

தனது குடும்பத்திற்காக இரவுநேர வேலைக்குச்சென்று, அதிகாலை வீடு திரும்பி, உறங்காமல் விழித்திருந்து தேனீயை பதிவேற்றிவிட்டே ஓய்வெடுத்துவந்தவர்.

புகலிட தேசத்தில் அவர் இணையத்தின் ஊடாக தமிழுக்கும் தமிழ் சமூகத்திற்கும் சேவையாற்றி அறிவார்ந்த தேடலையும் அமைதியாக விதைத்தவர்.

உலகடங்கிலும் வாழும் பலரைப்பற்றிய ஆக்கங்களும் தேனீயில் வெளியாகியிருக்கின்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கத்தில் நான் பிரான்ஸிற்கு செல்லநேரிட்டது. எனது வருகை பற்றி தோழர் ஜெமினிக்கு தெரிவித்தேன். ஜெர்மனியிலிருந்து ஒருநாள் அதிகாலையே ரயிலில் புறப்பட்டு என்னைத் தேடி வந்தார்.

எமக்கான சந்திப்பு ஒன்றுகூடலுக்கான ஏற்பாட்டை , எனது நீண்ட கால நண்பரும் ஈழநாடு இதழின் ஆசிரியரும் டான் தொலைக்காட்சி இயக்குநருமான எஸ். எஸ். குகநாதனின் துணைவியார் றஜனி குகநாதன் அவர்கள் பாரிஸில் தமது இல்லத்தில் செய்திருந்தார்.

தோழர் அழகிரியும் நானும் மற்றும் ஒரு தோழர் உதயகுமாரும் ரயில் நிலையம் சென்று தோழர் ஜெமினியை அழைத்துச்சென்றோம். அன்றைய தினத்தை மறக்கமுடியாது. யாழ். ஈழநாடு இதழில் முன்னர் பணியாற்றிய பத்திரிகையாளர் துரைசிங்கமும் வந்திருந்தார்.

அவர் ஜெர்மனிக்கு சென்று சேரும் வரையில் பதட்டத்துடன் இருந்தேன். அந்தப்பதட்டம் மீண்டும் அவர் கொரோனோ தொற்றின் பாதிப்பின் பக்கவிளைவுகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் வந்தது.

" தொடர்ந்தும் பதட்டப்படாதீர்கள் தோழரே' நான் மேலும் மேலும் பதட்டம் தரமாட்டேன் விடைபெறுகின்றேன்' நினைவுகள்தான் சாசுவதமாக எஞ்சியிருக்கும்" என்று சொல்லாமல் சொல்லிவிட்டு போய்விட்டார்.

அவரது இழப்பு ஈடுசெய்யப்பட வேண்டியது. யார்தான் ஈடுசெய்வார்..?

Letchumananm@gmail.com

# ஒமைக்ரோன் தொற்றினால் அவுஸ்திரேலியா திணறுகின்றதா?

கொரோனாத் தொற்றை லாவகமாகக் கையாண்ட அவுஸ்திரேலியாவின் பெருமை பழங்கதையாகிவிட்டது. ஒமைக்ரோன் பரவல் தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது. தண்ணீருக்கு வெளியே விழுந்த மீனின் துடிப்பையே அவுஸ்திரேலியா நினைவுபடுத்துகின்றது.

தொற்றுப்பரவலினால் சங்கிலித்தொடரில் விளைவுகள் ஏற்படுகின்றன. பொருளாதாரப் பாதிப்பு ஏற்படுகின்றது. அத்தியாவசிய உணவுப்பொருட்களின் தட்டுப்பாடு எட்டிப்பார்க்கின்றது. மருத்துவமனைகளும், அம்புலன்ஸ்சேவைகளும் திணறுகின்றன. குடிநீர் விநியோகம், மின்சாரம், தொலைத்தொடர்பு போன்ற அத்தியாவசிய சேவைகளில் சீரின்மை ஏற்படலாம் எனக் கணிக்கப்படுகின்றது. இத்தகையதொருநிலைக்குத் தேசம் தயாராகவில்லையா என்னும் கேள்வியை எளிதில் கடக்க முடியவில்லை.

இயற்கை வளங்கள் நிறைந்ததே கங்காரு தேசமாகும். பஞ்சபூதங்களின் கடைக்கண் பார்வை தேசத்துக்கு எப்போதுமே உண்டு. அகண்ட நிலப்பரப்பு. வற்றாத நீர்வளம். குறைவில்லாத வெப்பம். சுத்தமான காற்று. கண்கவர் ஆகாயப்பரப்பு என இயற்கைவளங்களினால் சீராட்டப்படுகின்ற தேசமாகும். அதனால் விவசாயம் செழிக்கின்றது. கால்நடைகள் ஆரோக்கியமாக வளர்கின்றன. பால் உற்பத்தி வளமாகவுள்ளது. இத்துணை இயற்கையின் கொடைகளையும் மனிதரிடம் கொண்டுவந்துசேர்ப்பதற்கு மனிதர்கள் தேவையாகும். விவசாயம் செய்பவர்கள், இறைச்சி பதனிடுபவர்கள், பொருட்களை உற்பத்தி செய்கின்றவர்கள், அதனை விநியோகிக்கின்றவர்கள், சூப்பர்மார்கெட்டில் வேலை செய்பவர்கள் எனச் சங்கிலித் தொடரில் மனிதர்கள் தேவை. பலதொழில்கள் இயந்திரமயமாகியுள்ளன. அத்தகைய சூழலிலேகூட ஏதோவொரு புள்ளியில் மனிதன் தேவை. பொருளாதாரத்தை வளர்ச்சிப்பாதையில் உந்தித்தள்ளுகின்ற பங்குச்சந்தை, சர்வதேசவர்த்தகம், தகவல்தொழில்நுட்பம் போன்ற பல்வேறுதுறைகளும் இயங்குவதற்கு மனிதர்கள் தேவை. அந்த மனிதர்களுக்கு உணவு, குடிநீர், வதிவிடத்துடன் தொடர்புடைய சேவை, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அடிப்படைகள் தேவை. அதனை இயக்குவதற்கும் மனிதர்கள் தேவை. ஆக, பொருளாதார இயக்கத்தின் அடிப்படையே மனிதவளமாகும். அதனையே ஒமிக்ரோன் தொற்றுப்பரவல் அச்சுறுத்துகின்றது. அதுவே அவுஸ்திரேலியா எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாகும். ஒமிக்ரோன் அல்ல.

இத்தகைய பெறுமதியான மனிதவளத்தைப் பேணுவதிலே, தேசத்தின் கவனம் எவ்வாறு பிசகியது என்பது புரியாதபுதிராகும்.

தொற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கவேண்டும். மருத்துவ வளங்களின் பாவனை உச்சவரம்பு தொடுவதைத் தடுக்கவேண்டும். அதன்பொருட்டு சமூகப்பரவல் அதிகரிக்காமல் கவனிக்கவேண்டும் என்பவற்றிலே கூர்மையான இலக்கை அவுஸ்திரேலியா கொண்டிருந்தது. கொரோனாப் பேரிடரைக் கையாள பூகோள அமைவிடமும் ஏதுவாகியது. பொதுமுடக்கம் போன்ற கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியது. சர்வதேச எல்லைகளைக் கணிசமான காலத்துக்கு மூடிவைத்திருந்தது. வெளிநாட்டிலிருந்து திரும்புகின்ற அவுஸ்திரேலியர் தொடர்பில் ஒழுங்குமுறையைப் பேணியது. அதிலே கட்டாயத்தனிமைப்படுத்தல் முக்கிய கூறாகியது. வெளிநாடு செல்பவர்கள்கூட உரிய அனுமதி பெற்ற பின்னரே செல்ல முடியும் என்னும் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறாக, இறுக்கமான நடைமுறை மூலமாகவே கொரோனாப் பேரிடரை அவுஸ்திரேலியா கையாண்டது. அதற்குக் கைமேல் பலனையும் பெற்றுக்கொண்டது.

அவுஸ்திரேலியாவின் பொருளாதாரம் பேரிடரிலும் தொய்வடையவில்லை பாரிய பாதிப்புக்களை எதிர்கொள்ளவில்லை. பாடசாலைகள் இயங்கின. மருத்துவமனைகள் பாரிய அழுத்தங்கட்கு உட்படவில்லை. இயல்பு வாழ்க்கை பெருமளவில் சாத்தியமாகியது. அதனால் கொரோனாப் பேரிடரின் கடுமையான முகத்தை அவுஸ்திரேலியர்கள் தரிசிக்கவில்லை.



அதேவேளையில் கொரோனாப் பேரிடரை ஒருமித்த தேசமாக அவுஸ்திரேலியா கையாண்டதாகக் கருத முடியவில்லை. அதுவே தற்போதைய திரிசங்குநிலைக்கு காரணமோ எனக் கருதவேண்டியிருக் கின்றது.

**தொற்றுப்பரவலினால் சங்கிலித்தொடரில் விளைவுகள் ஏற்படுகின்றன. பொருளாதாரப் பாதிப்பு ஏற்படுகின்றது. அத்தியாவசிய உணவுப்பொருட்களின் தட்டுப்பாடு எட்டிப் பார்க்கின்றது. மருத்துவமனைகளும், அம்புலன்ஸ்சேவைகளும் திணறுகின்றன. குடிநீர் விநியோகம், மின்சாரம், தொலைத்தொடர்பு போன்ற அத்தியாவசிய சேவைகளில் சீரின்மை ஏற்படலாம் எனக் கணிக்கப்படுகின்றது.**



நியூசிலாந்து சிற்சபேசன்

சமஷ்டிமுறைமையின் இடக்குமுடக்குகளை பேரிடரிலேயே காணமுடிந்தது. கல்வி, சுகாதாரம், பொலிஸ் போன்ற விடயங்களில் சட்டமியற்றும் சுயாதீன அதிகாரம் மாநிலங்களுடையதாகும். அத்தகையசூழலிலே மூலோபாயங்களை வகுப்பது சவலாகியது. தடுப்பூசி, அன்டிஜன்பரிசோதனை போன்றவற்றின் முகாமைத்துவத்திலே சமஷ்டிமுறையின் பீத்தல்கள் தெரிந்தன.

அவுஸ்திரேலியாவில் லிபரல் கட்சி யும், லேபர் கட்சியுமே ஆட்சியமைக்கும் வலுக்கொண்டவையாகும். சஷ்டி ஆட்சி லிபரல் கட்சியிடம் உள்ளது. மொத்தமுள்ள ஆறு மாநிலங்களில் மூன்றில் லேபர் கட்சியும், மற்றைய மூன்றில் லிபரல் கட்சியும் ஆட்சி நடாத்துகின்றன. டார்வின் மற்றும் கான்பராவைத் தலைநகராகக் கொண்ட பிரதேசங்களின் (டெரிடரி) ஆட்சி லேபர் கட்சியிடம் உள்ளது. வலதுசார் லிபரல் கட்சி பொருளாதார வளர்ச்சியிலும், இடதுசார் லேபர் கட்சி மக்கள்நலன்சார்ந்த வளர்ச்சியிலும் கவனத்தைக் கொண்டிருப்பனவாகும்.

தேசம்தழுவிய விடயங்களை அணுகுவதற்காக நேஷனல் காபினெட் (தேசிய அமைச்சரவை) என்னும் பொறிமுறையை அவுஸ்திரேலியா கொண்டிருக்கின்றது. அஃது பிரதமர் தலைமையில் மாநிலங்களின் பிரீமியர்களையும் (தலைமையமைச்சர்), பிரதேசங்களின் (டெரிடரி) முதலமைச்சர்களையும் உள்ளடக்கியதாகும். நேஷனல் காபினெட் மேற்கொள்கின்ற தீர்மானங்களின் அமுலாக்கத்திலேயுள்ள ஓட்டைகளைப் பேரிடரின்போது காணமுடிந்தது. பாடசாலைகளை மூடுவதில்லை என நேஷனல் காபினெட் தீர்மானித்தது. ஆனால் சில மாநிலங்கள் பாடசாலைகளை மூடின. தடுப்பூசியில் குறிக்கப்பட்ட அளவை எட்டும்போது எல்லைகளைத் திறப்பதாக நேஷனல் காபினெட் தீர்மானித்தது. அதனை ஒருமாநிலம் நடைமுறைப்படுத்தவில்லை. கொரோனாத்தொற்று நீக்கம் (எலிமினேஷன்) மற்றும் அடக்கல் (சப்றஷன்) மூலோபாயத்திலே ஒருமித்த கருத்து ஏற்பட்டது. ஆனால் அதனை நடைமுறையில் காணமுடியவில்லை. அதனால் பல்வேறுசந்தர்ப்பங்களில் தெளிவின்மையையே காணமுடிந்தது.

மறுவளத்தில், பொதுமுடக்கம், கட்டாயத்தடுப்பூசி போன்ற விடயங்களிலே பொதுமக்களிடையே படிப்படியாக அதிருப்தி அதிகரித்தது. அஃது அரசுக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்தியது. தடுப்பூசி ஏற்றிக்கொண்ட பின்னர் இயல்புவாழ்க்கை கிடைத்துவிடும் என்னும் நம்பிக்கை துளிர்த்தது. விடுதலை கிடைத்துவிட்டதான உணர்வு ஏற்பட்டது. பொருளாதாரத்தின் துடிப்பான இயக்கத்துக்கு அரசு அவசரப்பட்டது. அதனால் சன ஊடாட்டங்களும், நுகர்வுமனநிலையும் சடுதியாக அதிகரித்தமையைக் கண்டுகொள்ளவில்லை. விளைவு பாரதூரமாகியது. ஒமிக்ரோன் பரவல் காட்டுத்தீயாகியது. யாரோடு நோவேன் யார்க்கெடுத்துரைப்பேன் என அவுஸ்திரேலியா தற்போது திணறுகின்றது. ■





# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

13. ரவியும் ரமணனும் ரதியும் சகோதரர்கள். ரதியின் மகன் மதன் ஆவார். ரவிக்கு ராஜா, ராம் எனும் இரு மகன்மார் உள்ளனர் எனின், ரதி ராஜாவுக்கு என்ன உறவு முறை?

1) அம்மா 2) மாமி 3) பெரியம்மா

❖ **கீழே தரப்பட்டுள்ள தொடர்புகளை அவதானித்து 14, 15 ஆகிய வினாக்களுக்கு விடையினைத் தெரிவு செய்க.**

□ + △ + ○ = 12

△ + ○ = 6

□ + △ = 10 எனின்,


14. □ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

1) 4 2) 6 3) 2

15. □ × △ = ........... என்பதன் பெறுமானத்தினைக் கணித்துச் சரியான விடையைத் தெரிவு செய்க.

1) 10 2) 20 3) 24


16. எண்கள் எழுதப்பட்ட சக்கரத்திற்கும், சட்டகத்திற்கும் இடையே உள்ள தொடர்பை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




| | | | |
|---|---|---|---|
| 2 | 4 | 5 | 7 |
| 6 | 20 | ...... | 14 |


1) 20 2) 24 3) 25

17. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.





1) 9 2) 4 3) 6


18. இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?




1) 17 2) 12 3) 18

19. 


மேற்குறித்த தாயக் கட்டையில், B எனக் குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரேயுள்ள பக்கத்தைக் காட்டும் எழுத்து யாது?

20. 


இச்சதுரமுகி அட்டையை விரிக்கும்போது வரும் மிகப் பொருத்தமான வெட்டுரு எது?





1) 2) 3)

21. புகையிரதத் தொடர் ஒன்றில் உறங்கு நிலை இருக்கை, உள்ள பெட்டியானது முன்னிருந்து பார்க்கும்போது 12 ஆவது பெட்டியாகவும் பின்னிருந்து பார்க்கும்போது 9 ஆவது பெட்டியாகவும் இருக்கும் எனின், இத்தொடரில் உள்ள பெட்டிகளின் எண்ணிக்கை யாது?

1) 20 2) 21 3) 22

22. மயூரி A என்ற இடத்தில் இருந்து வடக்குத் திசை நோக்கி 5 m தூரம் சென்று வலது பக்கமாகத் திரும்பி 10 m தூரம் சென்று அங்கிருந்து தெற்கு நோக்கி 15 m தூரம் சென்று D என்ற இடத்தை அடைந்தாள். A என்ற இடம் D என்ற இடத்திற்கு எத்திசையில் உள்ளது?

1) வடகிழக்குத் திசை 2) வடமேற்குத் திசை 3) தென்மேற்குத் திசை

23. 

இப்படத்தினை அவதானித்து இது ஒரு நாளின் எந்நேரமாக இருக்க முடியும் எனத் தெரிவு செய்க.

1) காலை 5.00 2) மு. ப. 10.00 3) பி.ப 8.00

## விடைகள்

*13) 2 14) 2 15) 3 16) 1 17) 2*
*18) 3 19) 2 20) 3 21) 1 22) 2*
*23) 2*

கல்வி tv CHANNEL-1

**22.01.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சுத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சுத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**22.01.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இராணுவ உதவியுடன் சிறுபோகத்தில் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்படும்!

## மட்டக்களப்பு அரச அதிபர்



மண்முனைப்பற்று, ஜன. 22

சேதனப்பசளை பாவனை பெரும் விவசாய புரட்சி திட்டமாகும். இராணுவத்தினர் மூலம் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி சேதனப் பசளையை உற்பத்தியை மேற்கொள்வதே அரசாங்கத்தின் பசுமை செயலணி திட்டத்தை முன்னெடுக்கின்றது. நாட்டின் பாதுகாப்பு, உணவு, சுகாதாரம் ஆகிய பாதுகாப்புக்கள் முக்கியமானவை. உணவு பற்றாக்குறை நாட்டில் ஏற்படக்கூடாது என்பதற்காகவே அரசாங்கம் இவ்வாறான திட்டங்களை முன்னெடுக்கிறது. எமது விவசாயிகள் பாதிக்கப்படகூடாது என்பதற்காகவே இந்த பசுமை செயல் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. மட்டு மாவட்டத்தில் எதிர்வரும் சிறுபோகத்தை 33 ஆயிரத்து 700 ஹெக்ரெயரில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட வுள்ளது என்று மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் நேற்று மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பசுமை செயலணி பயிற்சி செயற்பட்டறையில் இவ்வாறு கருத்துதெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்திற்கமைவாக இலங்கையில் பசுமை நஞ்சற்ற நாடு திட்டத்தின் கீழ் சேதன உர உற்பத்தியும் பாவனை நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மட்டு மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் உணவு உற்பத்தி திறனை அதிகரிக்கும் முகமாக மாவட்டத்திலுள்ள விவசாய திணைக்கள மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்கள உரச்செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பசுமை செயலணியின் செயற்திட்டம் தொடர்பான செயலமர்வு நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது.இவ் நிகழ்விற்கு மட்டு மாவட்ட பசுமை செயலணி இணைப்பாளர் நிலுக்க பண்டார (231வது பிரிகெட் கொமாண்டர் ) மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த். மட்டு மாவட்ட விவசாய திணைக்கள - கமநல அபிவிருத்தி திணைக்கள (உரச்செயலக) உயர் அதிகாரிகள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் இராணுவ உயர் அதிகாரிகள் இச் செயலமர்வில் கலந்துகொண்டனர்.



# பட்டிருப்பு மத்திய மகா வித்தியில் சாதனையாளர் கௌரவிப்பு விழா!

களுவாஞ்சிக்குடி, ஜன. 22

மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை சாதனைகளாக வெளிக்கொணரும் வகையிலும் அவர்களின் சாதனைகள் அடையாளப்படுத்தப்பட்டு , ஊக்கப்படுத்தும் வகையிலும் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை ) களுவாஞ்சிக்குடியின் 2021 ஆண்டுக்கான சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை கலைக் கூடத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் எம். சபேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் பிரதம அதிதியாக பங்கேற்றார்.

இந்த நிகழ்வில் 2019 , 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் தெரிவு செய்யப்பட்ட 38 மாணவர்களும் , க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் திறமைகளை வெளிப்படுத்திய 8 மாணவர்களும் , 2019 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 23 மாணவர்களும் , 2020 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 43 மாணவர்களும் , இணைபாட விதான செயல்பாடுகளில் திறமையை வெளிப்படுத்திய 13 மாணவர்களும் , தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவர்களை வழிப்படுத்தி விஞ்ஞானப் போட்டியில் கண்டுபிடிப்பாளர்களாக சாதனை புரிவதற்கு காரண கர்த்தாவாக திகழும் பாடசாலை இரசாயனவியல் ஆசிரியர் எஸ். தேவகுமார் ஆகியோரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(ஐ)

# இலங்கையின் முதல் 50 பெண்கள்; காரைதீவு சிவஜோதிக்கும் விருது



மட்டக்களப்பு, ஜன. 22

அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட வளர்ந்து வரும் பெண் தொழில் அதிபர்களில் காரைதீவை சேர்ந்த கோ. சிவஜோதி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் வளர்ந்து வரும் முதல் 50 பெண்களில் ஒருவராக சிவஜோதி தெரிவு செய்யப்பட்டமை பலரின் பாராட்டையும் பெற்றுள்ளது.

பெண்தொழிலதிபர்களை பாராட்டும் விதமாக 18ஆம் திகதி அன்று முதல் 50 பெண்கள் - 2021 (Women Top50 - 2021) விருது வழங்கும்விழா கொழும்பு சங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்றது.

விழாவில் காரைதீவு லக்ஷ்மி உற்பத்தியக உரிமையாளரான கோ. சிவஜோதிக்கும் விருது வழங்கப்பட்டது.

(ஐ)

# மட்டு. கொக்குவிலில் ஆடுகள் திருடிய இருவர் கைதாகினர்!

கொக்குவில், ஜன. 22

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவில் உள்ள திராய்மடு பிரதேசத்தில் முச்சக்கர வண்டியில் வந்து ஆடுகளை திருடிவந்த கும்பலைச் சேர்ந்த இருவரை நேற்று முன்தினம் கைதாகினர். அத்துடன், அவர்களிடம் இருந்து 14 ஆடுகள், திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டி என்பன கைப்பற்றப்பட்டன என்று கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

திராய்மடு பிரதேசத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆடு ஒன்று காணாமல் போனமையை அடுத்து அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் ஆலோசனைக்கமைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் எம்.பிரதீப் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணையில் ஈடுபட்டுவந்தனர்.

இந்தநிலையில், சிவப்பு நிற முச்சக்கரவண்டியில் ஆடுகள் திருடப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடித்தனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர் வழங்கிய தகவலுக்கமைய ஆடுகளை திருடி விற்பனை செய்துவரும் கும்பலுடன் தொடர்புடைய தியாய்மடு சேர்ந்த 40 வயதுடைய ஒருவரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட பிரதான சூத்திரதாரியான திராய்மடுவைச் சேர்ந்தவரும் வவுணதீவில் திருமணம் முடித்து வாழ்ந்து வரும் 25 வயது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, 14 ஆடுகள் மீட்கப்பட்டன. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்றும் அவர்களை தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கோணேஸ்வரத்தில் புர்காவுக்கு தடை!

## அறிவிப்பால் சர்ச்சை

திருகோணமலை, ஜன. 21

திருகோணமலையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கோணேசர் ஆலய வளாகத்திற்கு உள் நுழையும் வாயிலில் போடப்பட்டிருக்கும் அறிவித்தல் பலகை பேசுபொருளாகியுள்ளது.

அதாவது அங்குள்ள பலகையில் இஸ்லாமியர்களின் ஆடையான புர்கா அணிவது தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் அந்த ஆலயத்துக்கு செல்லும் முஸ்லிம்கள் மத்தியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மற்றைய மதத்தவர்களும் தமது கலாசார ஆடைகளுடன் திருகோணேஸ்வரத்துக்கு வருகை தருகின்றனர். இந்த நிலையில், பர்தாவுக்கு மட்டும் தடை ஏன்?, திருகோணமலையில் இணைந்து வாழும் மூவின மக்களுக்கும் இடையே இது வேறுபாட்டை ஏற்படுத்தும் என்றும் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. (ஐ)



# கம்பிஆறு பிரதான வீதியின் திருத்தப் பணிகள் ஆரம்பம்!

மட்டக்களப்பு, ஜன. 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையிலிருந்த போரதீவுப்பற்று பிரதேசசபைக்கு உட்பட்ட கம்பிஆற்று சமுளையடி வட்டை வீதி திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட கம்பிஆற்று பிரதான வீதி, சமுளையடி வட்டையில் இருந்து ஆனை கட்டிய பகுதிக்கு செல்லும் 3 கிலோமீற்றர் நீளமான பிரதான வீதியாகும்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பருவப்பெயர்ச்சி மழை காரணமாக இந்த வீதி வெள்ள அனர்த்தத்தால் முற்றாக சேதமடைந்தது. இந்த வீதியால் பயணம் செய்யும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், வயோதிபர்கள், நோயாளிகள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

சமுளையடிவட்டை- ஆனைகட்டிய வெளி பிரதான வீதியானது போரதீவுப்பற்று பிரதேச பிரிவுக்குட்பட்ட மண்டூர் கமநல கேந்திர நிலையத்துக்கு உரிய விவசாய வீதியாகும். பல வருடங்களாக வெள்ள அனர்த்ததால் தொடர்ச்சியாக பாதிக்கப்படும் இந்த வீதி அடிக்கடி சேதமடைவது வழமை. இதன்போது, ஆனைகட்டிய வழி, நெடியவட்டை, சின்ன வத்தை, மாலையர் கட்டு, பலாச்சோலை காக்காச்சி வட்டை ஆகிய மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

போரதீவுப்பற்று பிரதேச சபையின் கனரக வாகன உதவிகளுடன் ஆனைகட்டிய வெளி விவசாய அமைப்புகளின் பங்களிப்புடன் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்ட வீதியை திருத்தும் பணிகள் மண்டூர் கமநல சேவை உத்தியோகத்தர் கோ. ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)




# தலைநகரை மாற்றுகிறது இந்தோனேசியா!

ஜகார்த்தா, ஜன. 22

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவை போர்னியோ தீவுக்கு மாற்றும் பிரேரணைக்கு அந்நாட்டு பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

புதிய தலைநகருக்கு நுசாந்தரா எனப் பெயர் வைக்கவும் இந்தோனேசிய அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த சில வருடங்களாக இந்தோனேசியத் தலைவர்கள் பலரும் வலியுறுத்தி வந்த கோரிக்கை தற்போது நிறைவேறவுள்ளது.

தலைநகரை மாற்ற பாராளுமன்றம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து புதிய தலைநகரை மேம்படுத்துவதற்கான பணியை இந்தோனேசியா தொடர்ந்துள்ளது.

தேசிய திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு முகாமையின் தரவுகளின்படி, புதிய தலைநகருக்கான மொத்த நிலப்பரப்பு சுமார் 256,143 ஹெக்டேயர் (சுமார் 2,561 சதுர கிலோமீற்றர்) என அளவிடப்பட்டுள்ளது.

உலகின் மூன்றாவது பெரிய தீவான போர்னியோவின் பெரும்பகுதியை இந்தோனேசியா கொண்டுள்ளது. மலேசியா மற்றும் புருனே ஆகிய நாடுகள் போர்னே தீவின் வடக்குப் பகுதியின் சில பகுதிகளைக் கொண்டுள்ளன.

தலைநகர் ஜகர்த்தாவில் மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வருவது இந்தோனேசிய அரசுக்குத் தொடர்ந்து பிரச்னையாகவே இருந்து வந்தது. மேலும் கால நிலை மாற்றம் காரணமாகப் பல்வேறு இயற்கை பேரிடர்களால் கடும் பாதிப்பை ஜகார்த்தா சந்தித்து வருகிறது.

மக்கள்தொகை அதிகரிப்பால் வாகனப் பெருக்கமும், காற்று மாசும் ஜகார்த்தாவில் அதிகரித்து வருகின்றன.

2019ஆம் ஆண்டே ஜகார்த்தாவிலிருந்து தலைநகரை மாற்றும் முடிவை இந்தோனேசிய அரசு எடுத்துவிட்டது. கொரோனா காரணமாக இந்த முடிவு தள்ளிவைக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (அ)



# கானாவில் வெடிமருந்துகள் ஏற்றிச் சென்ற ட்ரக் விபத்து!

## 17பேர் உயிரிழப்பு! 500 கட்டடங்கள் சேதம்!!

அக்ரா, ஜன. 22

மேற்கு கானாவில் சுரங்கத்தில் பயன்படுத்தப்படும் வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற ட்ரக் வண்டி மீது மோட்டார் சைக்கிள் மீது மோதி வெடித்ததில் குறைந்தது 17பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 59 பேர் காயமடைந்தனர்.

மேலும், 500 கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பின் துணை இயக்குநர் ஜெனரல் செஜி சாஜி அமெடோனு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாட்டின் மேற்குப் பிராந்தியத்தில் உள்ள போகோசோ மற்றும் பாவ்டி நகரங்களுக்கு இடையே உள்ள அபியேட்டில் இந்த வெடிப்பு ஏற்பட்டது.

இவ்விபத்து சுரங்கத்திலிருந்து 140 கிலோமீற்றர் (87 மைல்) தொலைவில் நடந்ததாக கின்ரோஸ் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தினார்.

கனடாவை தளமாகக் கொண்ட கின்ரோஸ் நிறுவனத்தால் நடத்தப்படும் சிரானோ தங்கச் சுரங்கத்துக்குச் சென்று கொண்டிருந்த வெடி பொருட்களை ஏற்றிச் சென்ற ட்ரக்கின் கீழ் மோட்டார் சைக்கிள் சென்றபோது, ட்ரக் வெடித்து சிதறியது.

இதனை அடுத்து பொது மக்கள் தங்கள் பாதுகாப்பிற்காக அந்தப் பகுதியை விட்டு அருகிலுள்ள நகரங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# மீண்டும் சோவியத் ஒன்றியத்தை உருவாக்க விரும்புகிறது ரஷ்யா!

## பிரிட்டன் அமைச்சர் குற்றச்சாட்டு

லண்டன், ஜன. 22

மீண்டும் சோவியத் ஒன்றியத்தை உருவாக்க ரஷ்யா விரும்புவதாக பிரிட்டன் குற்றம் சாட்டியுள்ளது.

சிட்னியில் நடைபெற்ற ஊடக சந்திப்பில், பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் லிஸ் ட்ரஸ் இந்த கருத்தை வெளியிட்டார்.

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் பேச்சு நடைபெறவுள்ள நிலையில் அவரது எச்சரிக்கை வந்துள்ளது.

உக்ரைன் மீது படையெடுத்தால், ஆப்கானிஸ்தானை சோவியத் கைப்பற்றியது போன்று பயங்கர உயிரிழப்பு ஏற்படும் என்றும் அவர் எச்சரித்த ார்.

மேலும், ஜனாதிபதி விளாடிமிர் புடினை பின்வாங்குமாறு வெளியுறவு அமைச்சர் லிஸ்




ட்ரஸ் வலியுறுத்தினார்.

ரஷ்யா ஆக்கிரமிப்புக்கு திட்டமிடுவதாகக் கூறப்படுவதை மறுக்கிறது.

ஆனால் உக்ரைனுடனான தனது எல்லைக்கு அருகில் 100,000 துருப்புக்களை நகர்த்தியுள்ளது.

அத்துடன், நேட்டோவின் தலைவர் ஐரோப்பாவில் ஒரு புதிய மோதலுக்கான உண்மையான ஆபத்து உள்ளது என எச்சரித்துள்ளார்.

உக்ரைன் ஒருபோதும் நேட்டோவில் சேர அனுமதிக்கப்படக்கூடாது என்றும் கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ இராணுவ நடவடிக்கைகளை கைவிடவேண்டும் என்றும் புடின் வலியுறுத்தினார். (அ)

# பெரும்பாலான கட்டுப்பாடுகளை பெப்ரவரி நீக்க பிரான்ஸ் முடிவு!

## தடுப்பூசி அட்டை அடுத்த வாரம்

பரிஸ், ஜன. 22

பிரான்ஸில் வைரஸின் ஐந்தாவது அலை தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தாலும் அமுலில் உள்ள சுகாதாரக் கட்டுப்பாடுகளில் பெரும்பாலான வற்றை பெப்ரவரி மாதத்தில் நீக்கிவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை நடைபெற்ற சுகாதாரப் பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவைப் பிரதமர் ஜீன் காஸ்ரோ மாலையில் நாட்டு மக்களுக்கு அறிவித்தார். அச்சமயம் சுகாதார அமைச்சரும் அவரோடு பிரசன்னமாகியிருந்தார்.

"ஐந்தாவது தொற்றலை முடிந்து விடவில்லை. ஆனால் கரை தெளிவாகத் தெரிகிறது" என்று பிரதமர் அப்போது தெரிவித்தார். சிறுவர்கள் உட்பட அனைவருக்கும் பூஸ்ரர் தடுப்பூசி ஏற்றும் திட்டங்களை வரும் நாட்களில் மேலும் முடுக்கி விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

அதன்படி 12-17 வயதுப் பிரிவினருக்கு மூன்றாவது டோஸ் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஏற்ற ஆரம்பிக்




கப்படும். வெளி இடங்களில் மாஸ்க் அணிதல் கட்டாயம் என்ற விதி பெப்ரவரி 2முதல் இருக்காது. அதேபோன்று வீட்டில் இருந்து பணிபுரிவது கட்டாயம் என்ற விதியும் அன்றோடு நீங்கும்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் கீழ் சுகாதார அட்டைகள் அனைத்தும் தடுப்பூசி அட்டைகளாக எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் (ஜனவரி 24) நடைமுறைக்கு வரும். இரவு விடுதிகள் பெப்ர வரி 16 முதல் ஆரம்பிக்கப்படும்.

நின்றவாறு நடத்தும் களியாட்ட அரங்குகளும் அன்று முதல் அனுமதிக்கப் படும். விழா மண்டபங்கள், விளையாட்டு அரங்குகள் போன்றவற்றில் ஒன்று கூடு வோரது எண்ணிக்கைக்கும் அதன் பிறகு கட்டுப்பாடுகள் இருக்காது.

அருந்தகங்கள், சினிமா அரங்குகள், ரயில் போக்குவரத்துகளில் தற்சமயம் உள்ள கட்டுப்பாட்டு விதிகள் பலவும் பெப்ரவரி 16 முதல் தளர்த்தப் படும். (அ)

# போலந்தில் தடுப்பூசிகளை செலுத்தியுள்ள வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே உணவு!

வார்சா, ஜன. 22

போலந்தில் தடுப்பூசி செலுத்தியுள்ள வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே உணவு வழங்கப்படுவதாக, வார்சா நகர உணவகங்கள் தெரிவித்துள்ளன.

இதன்மூலம் தங்களது ஊழியர்களை கொரோனா தொற்றில் இருந்து பாதுகாக்க முடியுமென உணவகங்கள் நம்புகின்றன.

வாடிக்கையாளர்கள் தங்கள் தடுப்பூசி சான்றிதழ்களை உணவகங்கள், அருந்தகங்கள் மற்றும் பிற இடங்களில் காட்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதுபோன்ற நடவடிக்கை தடுப்பூசி போடுபவர்களின் எண்ணிக்கையை 10 சதவீதம் அதிகரிக்கும் என்று மருத்துவக் குழு ஆலோசகரான பேராசிரியர் ராபர்ட் பிளிசியாக் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை தொடர்பாக பிரதமருக்கு ஆலோசனை வழங்கும் போலந்து மருத்துவ சபையின் 17 உறுப்பினர்களில் 13பேர் பதவியை இராஜினாமா செய்துள்ளனர்.

போலந்தில் சுமார் 56 வீதம் பேருக்கே கொரோனா தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இது ஐரோப்பிய ஒன்றிய அளவில் சராசரியை விட மிகக் குறைவாக கருதப்படுகிறது.

மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவானவர்கள் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி பெற்றுள்ளனர். (அ)

# இருபது - 20 உலக கிண்ணம் அட்டவணை வெளியானது!

முதல் போட்டியில் இந்தியா - பாக். மோதல்




டுபாய், ஜன. 22

அவுஸ்திரேலியாவில் வரும் ஒக்ரோபர் நடக்கும் இரு பது - 20 உலகக்கிண்ணப் போட்டிக்கான அட்டவணை நேற்று முன் தினம் வெளியானது.

முதல் சுற்று போட்டி யில் முதலாவது போட்டியில் இலங்கை - நமீபியா அணி கள் மோதவுள்ளன. இதேபோன்று, சுப்பர் - 12 சுற்றின் முதல் போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

உலகக் கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியாவில் ஒக்ரோபர் 16ஆம் திகதி முதல் நவம்பர் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்பர்ன், சிட்னி, பிரிஸ்பேன், அடிலெய்ட், ஜிலாங், ஹோபர்ட், பெர்த் ஆகிய 7 நகரங்களில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடக்கின்றன.

இந்த7 நகரங்களிலும் மொத்தம் 45 போட்டிகள் நடக்கின்றன. 16 அணிகள் பங்கேற்கும் உலகக்கிண்ணத் தொடரில், ஏற்கெனவே 12 அணிகள் பங்கேற்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. 4 அணிகளின் இடம் விரைவில் உறுதியாகும்.

முதல் சுற்றுப் போட்டிகள் ஜிலாங்கில் உள்ள கர்தினா பார்க்கில் இலங்கை அணியை எதிர்கொள்கிறது நமீபியா. இந்தப் போட்டி ஒக்ரோபர் 16ஆம் திகதி தொடங்குகின்றது. குறூப் ஏ பிரிவில் இரு அணிகள் தகுதிச்சுற்று மூலம் தேர்வு பெறும். இதேபோல இரு முறை சம்பியனான மே.இ.தீவுகள் அணியும் தகுதிச்சுற்று மூலம் சுப்பர்-12 சுற்றுக்கு வர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

குறூப்-பி பிரிவில் இடம் பெற்றுள்ள மே.இ.தீவுகள் அணி ஸ்கொட்லாந்து, மற்றும் இரு தகுதிச்சுற்று அணிகளுடன் மோதுகிறது. சுப்பர்-12 சுற்றுகளில் குறூப்-1, மற்றும் குறூப்-2 என இரு பிரிவுகளில் அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் குறூப்-1இல் இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், ஏ-குறூப்பில் முதலிடம் பெறும் அணி, பி குறூப்பில் 2ஆவது இடம்பெறும் அணி தகுதி பெறும்

குறூப்-2இல் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், பி பிரிவில் முதலிடம் பெறும் அணி, ஏ பிரிவில் 2ஆவது இடம்பெறும் அணி தகுதிபெறும்.

போட்டி நடத்தும் மற்றும் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலிய அணி தனது முதல் ஆட்டத்தில் நியூசிலாந்து அணியை சிட்னியில் நடக்கும் போட்டியில் சந்திக்கிறது. நவம்பர் 1ஆம் திகதி பிரிஸ்பேனில் நடக்கும் போட்டியில் இங்கிலாந்து அணியை எதிர்கொள்கிறது நியூசிலாந்து அணி.

கிரிக்கெட் உலகில் பரம வைரிகளாகக் கருதப்படும் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் கடந்த உலகக் கிண்ணம் போன்று ஒரே குறூப்பில் உள்ளன. ஒக்ரோபர் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எம்.சி.ஜி. மைதானத்தில் நடக்கும் போட்டியில் இந்திய அணி தனது முதல் போட்டியில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஒக்ரோபர் 27ஆம் திகதி சிட்னியில் நடக்கும் ஆட்டத்தில் குறூப்-ஏ பிரிவில் 2ஆவது இடம்பெற்ற அணியுடன் இந்திய அணி மோதுகிறது. ஒக்ரோபர் 30ஆம் திகதி பேர்த் மைதானத்தில் நடக்கும் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்கிறது இந்திய அணி.

அடிலெய்ட் மைதானத்தில் நவம்பர் 2ஆம் திகதி நடக்கும் ஆட்டத்தில் இந்திய அணியுடன் பங்களாதேஷ் அணி மோதுகிறது.

நவம்பர் 6ஆம் திகதி மெல்பர்னில் நடக்கும் கடைசி சுப்பர்-12 போட்டியில் குறூப் - பி பிரிவில் முதலிடம் பெற்ற அணியுடன் இந்திய அணி மோதுகிறது.

இந்திய அணி இடம் பெற்றுள்ள குறூப்-1 பிரிவில் பங்களாதேஷ், குறூப்-ஏ பிரிவில் 2ஆவது இடம், குறூப்-பி பிரிவில் 2ஆவது இடம் ஆகிய அணிகளை எளிதாக இந்திய அணியால் தோற்கடிக்க முடியும். தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் இரு அணிகளில் ஓர் அணியை வென்றுவிட்டாலே ஏறக்குறைய இந்திய அணி அரையிறுதிக்கு செல்வது உறுதியாகிவிடும்.

இரு அரையிறுதி ஆட்டங்கள் சிட்னியிலும், அடிலெய்டிலும் நடக்கின்றன, இறுதிப் போட்டி மெல்போர்ன் மைதானத்தில் நடக்கின்றன.

சுப்பர்-12 பிரிவில் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் நேரடியாகச் சென்றுவிடும். இருபது - 20 தரவரிசையில் 8ஆவது இடத்துக்குகீழே இருந்த இலங்கை, மே.இ.தீவுகள், ஸ்காட்லாந்து நமீபியா ஆகிய அணிகள் முதல் சுற்றுக்குத் தகுதி பெறும், மீதமுள்ள 4 அணிகள் நடந்துவரும் தகுதிச்சுற்று மூலம் முதல்சுற்றுக்கு தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ. சி. சியின் ஒருநாள் அணி: ஹசரங்க, சாமீரவுக்கு இடம்!







டுபாய், ஜன. 22

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.)அறிவித்த 2021ஆம்ஆண்டுக்கான ஒருநாள் போட்டி அணியில் இலங்கையின் ஹசரங்க, சாமீரவுக்கு இடம் கிடைத்துள்ளது.

இதேநேரம், இந்த அணியில் எந்தவோர் இந்திய வீரரும் இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐ. சி. சியின் ஒருநாள் அணிக்கு தலைவராக பாகிஸ்தான் வீரர் பாபர் அஸாம் நியமிக்கப்பட்டுள்ளார். விளையாடும் பதினொருவர் அணியில் தென்னாபிரிக்காவின் டுசென், மலான் ஆகிய இருவர் இடம்பிடித்துள்ளனர்.

இலங்கை அணியைப் பொறுத்தவரை வனிந்து ஹசரங்க பந்து வீச்சு, துடுப்பாட்டம் என இரண்டிலும் கடந்த ஆண்டு சிறப்பாகச் செயல்பட்டார். 14 போட்டிகளில் 356 ஓட்டங்கள் குவித்த ஹசரங்க, 12 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அணி விவரம்: போல் ஸ்ட்ரிலிங் (அயர்லாந்து), ஜனேமன் மலான்(தென்னாபிரிக்கா), பாபர் அஸாம்(பாகிஸ்தான்) பக்கர் ஷமான்(பாகிஸ்தான்), வான் டேர் டுசென்(தென்னாபிரிக்கா), சஹிப் அல்ஹசன் (பங்களாதேஷ்), முஸ்பிஹர் ரஹீம் (பங்களாதேஷ்), வனிந்து ஹசரங்க (இலங்கை), முஸ்தபிஹூர் ரஹ்மான் (பங்களாதேஷ்), சிமி சிங் (அயர்லாந்து), துஷ்மந்த சாமீர (இலங்கை) (ஐ)



# ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசை: இந்தியாவுக்கு பின்னடைவு

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) நேற்று முன்தினம் வெளியிட்ட அணிகளுக்கான டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி முதலாவது இடத்திலிருந்து 3ஆவது இடத்துக்குச் சரிந்துள்ளது. மூன்றாவது இடத்திலிருந்த அவுஸ்திரேலிய அணி முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஷ் டெஸ்ட் தொடரை 4-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி அபாரமாகக் கைப்பற்றியது. இதன் மூலம் 3ஆவது முறையாகக் கோப்பையை ஆஸி. அணி தக்கவைத்தது. பிரிஸ்பேன், மெல்போர்ன்ஸ், ஹோபர்ட், அடிலெய்ட் ஆகிய இடங்களில் நடந்த போட்டிகளில் இங்கிலாந்தை வீழ்த்தியது அவுஸ்திரேலிய அணி.

இந்த வெற்றியால் தரவரிசையில் 119 புள்ளிகளுடன் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி முதலிடத்தைப் பிடித்தது. அதுமட்டுமல்லாமல் டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான தரவரிசையிலும் அவுஸ்திரேலிய அணி 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றி 116 புள்ளிகளுடன் இந்திய அணி முதலிடத்தைத் தக்கவைத்திருந்தது. அதன்பின் செஞ்சூரியனில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் வென்று தொடர்ந்து முதலிடத்தில் இருந்தது.

ஆனால், ஜொகன்னஸ்பர்க், கேப்டவுனில் நடந்த 2ஆவது மற்றும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்காவிடம் அடைந்த தோல்வியால், முதலிடத்திலிருந்து 3ஆவது இடத்துக்கு இந்திய அணி சரிந்தது.

பங்களாதேஷூக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்ததையடுத்து, உலக டெஸ்ட் சம்பியன் நியூசிலாந்து அணி 117 புள்ளிகளுடன் தொடர்ந்து 2ஆவது இடத்தில் நீடிக்கிறது.

தென்னாபிரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு இந்திய அணி தாயகம் திரும்பியவுடன் இலங்கை அணியுடன் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரைக் கைப்பற்றினால், மீண்டும் முதலிடத்தைப் பிடிக்க வாய்ப்புள்ளது.

பாகிஸ்தான் அணி ஒரு இடம் சறுக்கி 6ஆவது இடத்திலுள்ளது. இலங்கை, மே. இ. தீவுகள், பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகள் முறையே 7 முதல் 10 இடங்களில் உள்ளன. (ஐ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் சபலென்கா முன்னேற்றம்!

மெல்பல்ன், ஜன. 22

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு பெலாரசின் சபலென்கா முன்னேறினார். அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடப்பு ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் நடக்கிறது.

பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் உலகின் 'நம்பர்-2' வீராங்கனை பெலாரசின் சபலென்கா, சீனாவின் வாங் ஜின்னை சந்தித்தார். முதல் செற்றை சபலென்கா 1:6 என இழந்தார். பின் சுதாகரித்துக் கொண்ட இவர் அடுத்த இரு செற்களை 6:4, 6:2 என வசப்படுத்தினார். முடிவில் சபலென்கா 1:6, 6:4, 6:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

முகுருஜா தோல்வி

உலகின் 'நம்பர்-3' வீராங்கனை ஸ்பெயினின் முகுருஜா, பிரான்ஸின் அலைஸ் கார்னெட்டிடம் 3:6, 3:6 என்ற நேர் செற் கணக்கில் வீழ்ந்தார்.

மற்றொரு இரண்டாவது சுற்றில் போலந்தின் ஸ்வியாடெக், சுவீடனின் பீட்டர்சனை 6:2, 6:2 என வென்றார்.

மற்ற இரண்டாவது சுற்று போட்டிகளில் வன்ரோசோவா (செக் குடியரசு), பவ்லிசென்கோவா (ரஷ்யா), ஹாலெப், சர்ஸ்டீயா (ருமேனியா), மெர்டென்ஸ் (பெல்ஜியம்) வெற்றி பெற்றனர்.



# எரிபொருள், மின்சக்தி நெருக்கடிக்கு பொருளாதார தோல்வியே காரணம்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜன. 22**

**அரசாங்கத்தின் இரண்டு வருட பொருளாதாரத் திட்டத்தின் தோல்வியே தற்போதைய எரிபொருள் மற்றும் மின்சக்தி நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

டொலர் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினரான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார் .

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் பொருளாதார தோல்விகளின் விளைவாகவே மின்வெட்டு விதிக்கப்படுவதாகவும் எதிர்காலத்திலும் மின்வெட்டு தொடரும்.

இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் வழங்கிய தகவல்களைக் கருத்திற் கொள்ளும்போது, டொலர் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான தெளிவான திட்டம் அரசாங்கத்திடம் இல்லாததால், இந்த நெருக்கடி இன்னும் மோசமாகும் என்பது தெளிவாகிறது.

அரசாங்கம் தனது திட்டங்களையும் வெளியிடாது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் அரசாங்கத்தின் தோல்விக்குச் சான்றாகும்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலை இழப்பு, விவசாயத் துறையில் ஸ்திரமின்மை ஆகிய பல பிரச்னைகள் எழுந்துள்ளன. அரசாங்கத்தின் மீதான மக்களின் எண்ணம் எதிர்மறையாகவே உள்ளது.

மக்களின் அதிருப்தி மற்றும் தேர்தல் முடிவுகளால் அரசாங்கம் இன்று தேர்தலுக்கு அஞ்சுகிறது.

அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது அரசாங்கம் தேர்தலை சரியான நேரத்தில் நடத்தும் என சபதம் செய்தனர். ஆனால், இந்த வாக்குறுதியை நிறைவேற்ற அவர்கள் தவறியுள்ளனர்-என்றார். (அ)

# மன்னாரில் மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணி

மன்னார், ஜன. 22

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 7 தொடக்கம் 10 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கான 'பைஸர்' முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் லூசியா மகா வித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளில் மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தலைமையில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெற்றன.

தரம் 7 தொடக்கம் 10 வரை கல்வி கற்கும் 12 தொடக்கம் 16 வயதுடைய மாணவர்களுக்கு 'பைஸர்' தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இதுவரை மன்னார் மாவட்டத்தில் 8500 மேற்பட்ட மாணவர்கள் பைஸர் தடுப்பூசியை பெற்றுள்ளனர். (அ)

# மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஷானி அபேசேகர மனு தாக்கல்

கொழும்பு, ஜன. 22

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு தமக்கு எதிராக முன்வைத்த பரிந்துரைகளை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன, ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள், அவன்கார்ட் நிறுவனம், அந்த நிறுவனத்தின் தலைவர் நிஸங்க யாப்பா சேனாதிபதி மற்றும் அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஜானக பண்டார உள்ளிட்டோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு 2020 ஜூன் 16 ஆம் திகதி தனக்கு அழைப்பு கிடைத்ததாக மனுதாரர் ஷானி அபேசேகர தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய தான் அழைக்கப்பட்டதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் செய்த முறைப்பாட்டை விசாரிக்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என சுட்டிக்காட்டிய அவர், கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் மற்றும் நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் இந்த முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டார்.

எனவே இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு குறித்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமக்கு எதிராக 2020 நவம்பர் 24ஆம் திகதி சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சட்டவிரோதமானவை எனவும் சட்ட அடிப்படையற்றவை எனவும் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், அவற்றை வலுவிழக்கச் செய்யும் உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தை கோரியுள்ளார். (அ)

# தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் பணிப்பாளர்- ஊழியர் இடையே மோதல்

கொழும்பு, ஜன. 22

இலங்கையின் தேசிய உயிரியல் பூங்காவின் பணிப்பாளர் நாயகத்துக்கும் உயிரியல் திணைக்கள ஊழியர்களுக்கும் இடையிலான மோதல் காரணமாக தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் உள்ள விலங்குகளின் உயிர்களுக்கு ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மிருகக்காட்சிச்சாலையில் உள்ள விலங்குகளை பணயம் வைத்து இரு தரப்பினரும் தங்கள் கோரிக்கைகளை வெல்ல முயல்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சில விலங்குகள் உயிரிழந்துள்ளமை குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என குற்றம்சாட்டியுள்ள ஊழியர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தங்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் மிருகக்காட்சிச் சாலையில் உள்ள உயிரினங்களுக்கு உணவு வழங்குவதை நிறுத்தப்போவதாக ஊழியர்கள் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க- மிருகக்காட்சி சாலையில் உயிரினங்களுக்கு உணவு வழங்குவதற்காக சிறையில் உள்ள கைதிகளை பயன்படுத்த தயங்கமாட்டேன்.

மிருகங்களை கையாள்பவர்கள் மிருகங்கள் குறித்து அக்கறையில்லாமல் அவற்றுக்கு உணவு வழங்காமல் துன்புறுத்த நினைத்தால் நான் சிறைக்கைதிகளை பயன்படுத்துவேன்.

நான் முன்னர் கால்நடைகள் தொடர்பான அமைச்சராக பணியாற்றியுள்ளேன். விலங்குகள் பறவைகளுக்கு உணவு வழங்காததை பார்க்கும்போது வேதனையாக உள்ளது-என்றார். (அ)

# நாளாந்தம் 4 மணித்தியாலம் மின்சாரம் துண்டிக்கப்படும்

கொழும்பு, ஜன. 22

நாளாந்தம் சுமார் 04 மணித்தியாலங்கள் மின்சாரம் துண்டிக்கப்படலாம் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்சம் 2022 மார்ச் மாதத்துக்குள் பெரிய அளவிலான கடனைப் பெற்றுக் கொள்ள இலங்கை தவறினால் இந்நிலை ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் மாதம் பருவமழை தொடங்கும் வரையில் தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு கையிருப்பில் எரிபொருளை இறக்குமதி செய்யவேண்டியிருக்கும்.

இருப்பினும் மழைகாலம் வரை நாட்டில் எரிபொருளை பயன்படுத்தியே மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டும்.

ஆகவே, இந்த விடயத்தில் தேவையான தியாகங்களை செய்வதற்கு நாடு தயாராக இருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் நான்கு மணி நேர மின்வெட்டுக்கு பதிலாக, இப்போதிருந்தே ஒன்றரை மணி நேர மின்வெட்டை அமுல்படுத்துவது நல்லது-என்றார். (அ)

# உயர்தர கல்வியை தொடரவுள்ள மாணவருக்கு 1.68 மில்லியன் ரூபா நிதியில் புலமைப்பரிசில்!

## யாழ் மத்திய கல்லூரியின் 1987 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர் நிதிப் பங்களிப்பு

வடமராட்சி, ஜன. 22

யாழ் மத்திய கல்லூரியில் கல்விப் பொது தாராதர சாதாரண தரத்தில் கல்வி கற்று இறுதியாக நடைபெற்ற பரீட்சையில் அதிதிறமைச் சித்திகளை பெற்ற மாணவர்களின் உயர்தர கல்வியை ஊக்கமளிக்கும் வகையில் மத்திய கல்லூரியின் 1987 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களது நிதிப்பங்களிப்புடன் புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மங்களேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் மத்திய கல்லூரியில் உயர்தரக் கல்வியை தொடரவுள்ள குறித்த மாணவர்களுக்காக தலா ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாகவும், இதற்காக சுமார் 1.68 மில்லியன் நிதி குறித்த 1987 ஆம் ஆண்டின் உர்தரப் பிரிவு மாணவர்களால் பொன். விபுலானந்தன் ஞாபகார்தமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த புலமைப்பரிசில் திட்டத்திற்குரிய இணைப்பாளரும் கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிபரவியலாளருமான வித்தியானந்தநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தேசிய விளையாட்டுத்துறை பாடசாலையாக பரிணமித்துள்ள மத்திய கல்லூரியின் மாணவர்கள் இம்முறையும் சாதாரண தர பரீட்சையில் அதி சிறப்பு சித்திகளை பெற்று பாடசாலைக்கும் யாழ்.மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையப்பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் மத்திய கல்லூரியின் 1987 ஆம் ஆண்டு உயர்தர பிரிவில் கல்விகற்ற மாணவர்கள் நிதி ஏற்பாடு செய்திருந்தமைக்கு அமைய இம்முறை பரீட்சையில் திறமை சித்திகளை பெற்று மிளிர்ந்த மாணவர்களுக்காக இந்த புலமைப் பரிசில் திட்டத்தை வழங்கவுள்ளதுடன் இந்த திட்டம் தொடர்ந்தும் ஒவ்வொரு ஆண்டும் முன்னெடுக்கப்படும் என்றும் இணைப்பாளர் வித்தியானந்தநேசன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-02)

# மின்வெட்டு தேவைப்படாது

கொழும்பு, ஜன. 22

எதிர்வரும் நாட்களில் அவசர நிலை தவிர ஏனைய நாட்களில் மின்வெட்டு தேவைப்படாது என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையமும் அடுத்த சில நாட்களில் முழுமையாக இயங்கும்.

300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலக்கரி அனல்மின் நிலையம் இம்மாதம் 25 அல்லது 26ஆம் திகதிக்குள் முழுமையாக செயல்படும் என எதிர்பார்க்கிறோம்.

எனவே, எதிர்காலத்தில் மின்வெட்டு தேவையென நம்பவில்லை-என்றார். (அ)

## இந்திய...

சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தன.

காரைநகர் பிரதேச சபையின் முன்பாக நேற்றுக் காலை போராட்டத்தை முன்னெடுத்த மீனவர்கள் பின்னர் அங்கிருந்து பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்றனர்.

பிரதேச செயலகத்துக்கு பேரணியாக சென்ற மீனவர்கள் பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதி, மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவிக்கையில்-

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் செல்வதனால், எமது கடல் வளங்களும், கடல் சூழலும்,எமது உபகரணங்கள், வாழ்வாதாரங்கள் என்பன அழிக்கப்படுகின்றன.

அதனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சொல்லான துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

பல போராட்டங்களை முன்னெடுத்து இருக்கிறோம். பல தரப்புக்களிடமும் மகஜர்களை கையளித்துள்ளோம். இருந்தும் இன்று வரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

வெளிநாட்டு மீனவர்கள் ஒழுங்குபடுத்தல் தடைச்சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும், உள்ளூர் இழுவைமடி தொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அழிக்கப்பட்ட எமது தொழில் உபகரணங்களின் மதிப்புகள் பல கோடி ரூபாய் அதற்கான நஷ்ட ஈடுகளை பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை மலர்ந்துள்ள இந்த வருடத்திற்குள் எமக்கு தீர்வை பெற்று தர சகல தரப்பினர்களும் முயற்சிகளை முன்னெடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் , கடல் வளத்தையும் காத்து எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றனர். (அ-03)

## சர்வதேச...

தொடர்ந்து இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து எல்.ஈ.சி.எஸ் (LECS) நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள நிலையில் சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் ஆகியன இதற்கு அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 7 ஆயிரம்...

அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான மூன்றாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

வனவளத் திணைக்களம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலங்களை அபகரிக்கின்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கில் இருக்கின்ற நிலங்களை குறி வைத்து அரசும் வன இலாகவும் மோசமாக செயல்படுகின்றன. இதன் ஒரு நடவடிக்கையக வனவளத் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 2749. 53 ஹெக்ரெயரும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 2275. 61 ஹெக்ரெயரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில்1764.81 ஹெக்ரெயரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 530.37 ஹெக்ரெயரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 286.74 ஹெக்ரெயரும் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 14.95 ஹெக்ரெயரும்என மொத்தமாக 7091.64 ஹெக்ரெயர் மக்களின் விவசாய நிலங்களை, அவர்களின் பூர்வீக நிலங்களை சுவீகரிக்க வர்த்தமானி அறிவித்தல் விட முயற்சி எடுக்கப்படுகின்றது.

எனவே, இந்த முயற்சியை உடனடியாகநிறுத்த வேண்டுமென வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார்.

## நெருக்கடி...

சபை ஒத்திவைப்புவேளை மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மற்றும் எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது சவால்கள் நிறைந்த காலப்பகுதியாகும். சிரேஷ்ட அரசியல்வாதிகள் உலகலாவிய சவால்களுக்கு முகம்கொடுத்தது இல்லை. இந்த உலகலாவிய நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமாயின் பிரிந்து நின்று சேறு பூசிக்கொண்டிருப்பதில் பலனில்லை. மாறி மாறி குற்றச்சாட்டுகளை முன்வைத்துக்கொண்டிருப்பதிலும் பலனில்லை.

இதனால் மக்களே பாதிக்கப்படுவர். இதனால் ஜனாதிபதி அழைப்பு விடுத்ததை போன்று அனைவரும் ஒன்றிணைந்து எதிர்வரும் 2- 3 வருடங்களுக்கு தற்போதைய நெருக்கடியில் இருந்து வெளியே வர நடவடிக்கை எடுப்போம். தேர்தல் காலத்தில் நாங்கள் அரசியல் செய்வோம். அதனால் நாங்கள் மக்களுக்காக ஒன்றாக இருப்போம் - என்றார்.

## மாகாண...

உரிமைகளை வெளிப்படுத்துவதற்கான தளம் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கை அறிக்கைமீதான ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின்போது இது குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் குறிப்பிட்ட சில சரத்துக்களை உள்ளடக்குமாறு கோரியுள்ளன.

இந்த சந்திப்பின்போது தேர்தல் செலவினங்களைக் குறைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்-என்றார். (அ)

## தாயும் மகளும்...

மீட்கப்பட்டுள்ளன.

ஆனந்தராசா சீதேவி (வயது 47) என்ற 7 பிள்ளைகளின் தாயாரும், அவரது மகளான லக்சிகா (வயது 17) என்பவருமே தீயில் எரிந்து உயிரிழந்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தீயில் எரிந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. எனினும், நேற்று மாலையே இவர்கள் தீயில் எரிந்து உயிரிழந்த விடயம் தெரிய வந்தது.

தந்தையும் மகனும் கூலி வேலைக்காக வெளிமாவட்டத்துக்கு சென்று திரும்பி வந்த நிலையிலேயே இந்த விடயம் வெளிவந்தது.

இச்சம்பவம் தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மசகு எண்ணெயின் விலை 100 டொலராக உயரவாய்ப்பு

நியூயோர்க், ஜன. 22

உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன் றின் விலை 100 டொல ராக அதிக்கும் சாத்தியம் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஏழு வருடங்களில் ஒருபோதும் இல் லாத அளவுக்கு உலக சந் தையில் உச்சத்தை எட்டியுள்ள மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை, விரைவில் 100 டொலரை தாண்டக் கூடும் என சந்தை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதல் மசகு எண்ணெய் பீப் பாய் ஒன்றின் விலை 100 டொலரை எட்டவில்லை. எவ்வாறா யினும், இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதி யில் ஒரு பீப்பாய் பிரென்ட் மசகு எண்ணெயின் விலை 15 சதவீதத் தால் அதிகரித்து 88 டொலராக உள்ளது.

அவ்வாறே, அமெரிக்க டபிள்யூ. ரீ.ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 14 சதவீதத்தினால் அதிகரித்து 85.55 டொலராக உள்ளது.

# யாழில் 7 பேர் உட்பட வடக்கில் 12 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏழு பேர் உட்பட வடக்கில் மேலும் 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடம் என்பவற்றில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடத்தில் நேற்று 155 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 11 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் 6 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவர், இரணைமடு விமானப்படை முகாமில் 4 பேர் என 11 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மேலும் ஒரு தொற்றாளர் அடையாளம் காணப்பட்டார். (ஐ)

## சுன்னாகத்தில்...

திருட்டு நகைகள் 7 பவுண் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிகளில் செல்லும் பெண்களிடம் நகைகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் அண்மையில் சுன்னாகம் மற்றும் இளவாலை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்தது.

பிரிவின் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் புத்தூரைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 7 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், சந்தேக நபர்களிடமிருந்து நகைகளை கொள்வனவு செய்த சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணம் நகர நகைக்கடை உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

## கமநல...

மேற்கொண்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது.

சுமார் மூன்று மணிநேரம் இந்த கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி, அனைத்துப் பிரிவுகளையும் கண்காணித்ததுடன், திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரையாடினார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, கடந்த இரண்டு வருடங்களில் கைவிடப்பட்ட வயல்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் திட்டத்தின் மூலம், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களில் உள்ள அனைத்துத் தரிசு நெல் வயல்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடிந்ததென ஜனாதிபதியிடம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடளாவிய ரீதியில் ஏனைய தரிசு வயல் நிலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ளன. அவற்றைக் கைவிடுவதற்கான காரணங்களை ஆராய்ந்து, உரிமையாளர்கள் மற்றும் விவசாய அமைப்புக்கள் தலையிட்டு, அவற்றில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார் - என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தொற்றுக்கு...

களின் எண்ணிக்கையுடன் நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 272 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## அமெரிக்கா,...

டான் தொலைக்காட்சியில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ள 'ஸ்பொட்லைற்' நிகழ்ச்சிக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், நாட்டின் இனப் பிரச்னைக்கான இறுதித் தீர்வு கூட்டு சமஷ்டி முறைமையே, இதன் மூலமே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை நிலைநிறுத்தப்படும் என்ற விடயங்களை வலியுத்தி இந்தியப் பிரதமருக்கு எழுதப்பட்ட அந்தப் பொது ஆவணம் கடந்த 18 ஆம் திகதி இந்தியத் தூதரகத்திடம் கையளிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் இந்தப் பொது ஆவணமே அமெரிக்கா, மேற்கு நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளின் தூதரகங்களுக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் தலைவர்களே நேரில் சென்று கையளிக்கவுள்ளனர். இந்த நடவடிக்கை அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பமாகும் என்றும் அவர் கூறினார்.

மேலும், தமிழ் மக்களின் - வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் நிலைப்பாட்டையும், இந்தியாவுக்கு தமிழ் மக்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையையும் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தவும் இதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஏதுவான நிலை ஒன்றை உருவாக்கவும் வழியேற்படுத்தும் நடவடிக்கையாகவும் இந்த முயற்சி அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## அமைச்சர் கைதிகளை அச்சுறுத்திய சம்பவம்

# விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கு நடந்தது என்ன?

### எதிர்க்கட்சி எம். பி. கேள்வி

கொழும்பு, ஜன. 22

சிறைச்சாலைக்குள் கைத்துப்பாக்கியுடன் சென்ற அமைச்சரால் கைதிகள் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய ஆணைக்குழுவின் அறிக்கைக்கு என்ன நடந்தது என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க கேள்வியெழுப்பினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அசோக அபேசிங்க இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் கலாசாரத்தில் இருந்த நாட்டை மீட்பேன் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இதன்படி அவரின் குடும்பத்தில் உள்ளவர்களில் இருந்தே இந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம். அதாவது பென்டோரா பேப்பர் தொடர்பில் பெரும் சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தன. அது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைத்திருந்தார்.

அந்த ஆணைக்குழுவின் அறிக்கை ஒரு மாதத்திற்குள் சமர்பிக்கப்படும் என்று கூறியிருந்தார். ஆனால், பல மாதங்களாகியும் அது தொடர்பில் எந்தத் தகவல்களும் இல்லை. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படவும் இல்லை. ஜனாதிபதி அந்த அறிக்கை கிடைத்துள்ளதாகக் கூறப்படுகின்றபோதும், அது பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படவில்லை.

நாட்டை ஊழல் கலாசாரத்தில் இருந்த மீட்க வேண்டுமாயின் பென்டோரா பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது? அவை யாருடைய பணம் என்று இந்த பாராளுமன்றம் அறிந்துகொள்ள வேண்டும்.

இதேவேளை, இந்த அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் சிறைச்சாலைக்கு கைத்துப்பாக்கியுடன் சென்று கைதிகளுக்கு பிரச்னைகள் ஏற்படுத்தினர். அது தொடர்பாக விசாரணை நடத்தவதற்காகவும் ஆணைக்குழுவொன்றும் அமைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் அறிக்கைக்கு என்ன நடந்தது என்றும் மக்கள் கேட்கின்றனர் என்றார்.

# ராஜபக்ஷ குடும்பத்தினர் விரைவிலே வீடு செல்வர்!

### சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 22

"இந்த ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆட்சியை எவ்வாறு மாற்றுவது என்று மக்கள் எங்களிடம் கேட்கின்றனர். அவர்களிடம் நான் கேட்கின்றேன் இன்று ஆட்சி செய்வது யார் கோட்டாபய குடும் பத்தினர் மட்டும்தானே. ஆகவே மிக விரைவில் இந்த ஆட்சி யாளர்கள் வீடு செல்வார்கள்."

- இவ்வாறு தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி.

இன்று நாட்டில் அரிசி, உரம், டொலர் தொடர்பான பிரச்னைகள் எல்லாமே ஒரு நாடகம் எனவும் அவர் கூறினார். இந்த ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்னை தொடர்பாக துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கும் செயற்பாடு மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தில் ஓர் உரையை ஆற்றுவதாக இருந்தால் அது பலரிட மும் ஆராய்ந்து பேசவேண்டும். பாராளுமன்றத்தில் பேசிய பேச்சானது ஒரு பொறுப் பற்ற செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இன்று நாட்டில் அரிசி, உரம் , டொலர் பிரச்னை. இவை எல்லாமே ஒரு நாடக மாக தான் நாங்கள் பார்க்கின்றோம். ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஒன்று சேர்ந்தவர்கள் இன்று பல கதைகளை கூறுகின்றனர். தெற்கு வர்த்தகர்கள் கூறுவதைத் தான் கிழக்கிலுள்ள வர்த்தகர்களும் கூறுகின்றனர். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பயணிக்கவேண்டும்.

இன்று எல்லாவற்றுக்கும் விலைவாசி அதிகரித்துக் காணப்படுகின்றது. வாங்குவதற்கு பொருள் இல்லை. காஸ் வெடிப்பு என்கின்றார்கள். இது எல்லாமே ஒரு நாடகம். - என்றார். (அ)

## மரண அறிவித்தல்

மலர்வு 15 - 06 - 1931



உதிர்வு 19 - 01 - 2022

### திருமதி முத்துக்குமார் நவநீதம்

யாழ். புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பதுளை, யாழ்ப்பாணம், ஜேர்மனி Bielefeld ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், கனடா Mississauga வை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமார் நவநீதம் அவர்கள் 19.01.2022 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அம்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - யோகாம்பிகை தம்பதியரின் பாசமிகு மருமகளும்,காலஞ்சென்ற முத்துக்குமார் (முன்னாள் பதுளை பிரபல வர்த்தகர் T.M Brothers) அவர்களின் பாசமிகு மனைவியும், பாலகுமார்(ஜேர்மனி), சாந்திமலர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், துஸ்யந்தினி (ஜேர்மனி), சுந்தரராசா (அப்பன்- கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, யோகம்மா, காவேரியம்மா, கிருஷ்ணபூபதி, தில்லைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப் பிள்ளை (சரசு), மருதப்பு, மாணிக்கவாசகர், தனலட்சுமி, ஏரம்பு, நல்லதம்பி, தர்மலிங்கம், அம்பலவாணர், பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,மீரா - Steven, கீர்த்தனா, கோகுலன், தேனுஜன், அட்சாயினி ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,ஆதிரன் அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Sunday, 23 Jan 2022 6:00 PM - 9:00 PM
Monday, 24 Jan 2022 9:00 AM - 10:00 AM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

*கிரியை:*
Monday, 24 Jan 2022 10:00 AM - 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

*தகனம்:*
Monday, 24 Jan 2022 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**பாலகுமார் - மகன்**
**Mobile : +491714788813**
**Phone : +49521488570**

தகவல்:
**குடும்பத்தினர்.**




## மரண அறிவித்தல்

மலர்வு 02 - 08 - 1961



உதிர்வு 15 - 01 - 2022

### கிருஷ்ணப்பிள்ளை ஜெகதாசன் (சோமு)

யாழ்.கொற்றாவத்தை மலையன் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Zurich ஐ வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணப்பிள்ளை ஜெகதாசன் அவர்கள் 15.01.2022 சனிக்கிழமை அன்று சிவபாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வளர்மதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நிஷாந்தினி, அன்பு செல்வி, ஜெகதர்சினி, ஜெயகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,சுகர்ணன் அவர்களின் அன்பு மாமனாரும், யதிசினி, வேணுசன், டேனுசன் ஆகியோரின் அன்பு அம்மையாவும், வேலாயுதம்(இலங்கை), கலாவதி(ஜேர்மனி), காலஞ்சென்ற திலகவதி(இலங்கை), ஜெகதீஸ்வரன்(ஜெகன் -சுவிஸ்), ஜெகநாதன்(துரை-சுவிஸ்), புஸ்பராணி (இலங்கை), சிவராணி (லண்டன்), யோகராணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற அண்ணதுரை(ஜேர்மனி), தவமலர், யோகநாதன்(இலங்கை), ஜெயகுணராசா(இலங்கை), ஜெகதீசன்(இலங்கை), செல்வா(லண்டன்), யோகநாயகி(சுவிஸ்), மலர்வதனி (சுசிலா- சுவிஸ்), வசந்தகுமார்(சுவிஸ்), விஜயநாதன், விசிந்தன், சுபாசினி செல்வராணி, காலஞ்சென்ற விஜயகுமார்(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

*பார்வைக்கு :*
Tuesday, 18 Jan 2022 10:00 AM - 7:00 PM
Cimetière de Rosenberg Am Rosenberg 5 8400 Winterthur Switzerland

*தகனம்:*
Wednesday, 26 Jan 2022 8:00 AM - 11:00 AM
Cimetière de Rosenberg Am Rosenberg 5 8400 Winterthur Switzerland

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**துரை - சகோதரன்**
**Mobile : +41763774541**

தகவல்:
**சகோதரர்கள்**
**ஜெகன் - சுவிஸ்**
**துரை - சுவிஸ்**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- பம்பல் கே சம்பந்தம்
4.30 மணி : மனிதனின் மறுபக்கம்



5.00 மணி : அந்தி மந்தாரை
6.00 மணி : எதுசரி எதுபிழை-13 ஆவது திருத்தத்தை கேட்பதும் எதிர்ப்பதும்



**இரவு**
7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு